REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) ESTABLISHED 19 FEB. 1876

# பாதுகாவலன்

PATHUKAVALN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 125
இதழ் 18
பக்கங்கள் 14
விலை 10 ரூபா
கிறிஸ்மஸ் சிறப்பிதழ்
15 டிசம்பர் 2001

UNIVERSITY OF JAFFNA LIBRARY 01 JAN 2002 PERIODICALS DIVISION

# 2001 நத்தார் 2002 புதுவருட

## சிறப்பு மலர்

உலகெங்குமுள அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையை கண்டனர் – (திருப்பாடல் 1:3)

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்


HAPPY CHRISTMAS AND NEW YEAR

செல்வம் செல்வம் இயேசு ஆண்டவர் செல்வம்
செல்வம் செல்வம் எனக்கும் உனக்கும் செல்வம்



## ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி

## இனப்பிரச்சினையை முதன்மையான பிரச்சினையாக அணுகி இந்நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரத்தோடு வாழ ஓர் நிரந்தரத் தீர்வினைத் தரும்படி புதிய பிரதமரை தமிழ் மக்கள் அனைவர் பேராலும் வேண்டிக்கொள்கிறோம்



எமது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதால் தமிழ் மக்களின் நீண்டகால விடுதலை போராட்டத்திற்கு ஒரு முடிவு வருமா? என்ற ஏக்கத்தோடும் ஒரு நம்பிக்கையோடும் இருக்கின்ற வேளையில் 2001ஆம் ஆண்டின் பாலக இயேசுவின் பிறப்பு விழாவினை நாம் கொண்டாட முற்படுகிறோம்.

“ஒரு குழந்தை நமக்கு பிறந்துள்ளார். அவர் திருப்பெயரோ அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும். அந்த அமைதியின் அரசை கொண்டாடும் காலம் கிறிஸ்மஸ் காலமாகும். தமிழ் மக்களாகிய நாம் மிக நீண்டகாலமாக போரையும் அதன் அழிவுகளையும் இடம்பெயர் அவலங்களையும் எமது அனுபவங்களாக்கியுள்ளோம். இனிப் போர் வேண்டாம், போர் முழக்கங்கள் வேண்டாம், இடம்பெயர்வுகள் வேண்டாம், உயிரழிவுகள் வேண்டாம் – அமைதி வேண்டும், நிம்மதி வேண்டும், சமாதானம் வேண்டும் என்ற நிலையிலேதான் நாம் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவை அணுகுகிறோம்.

அமைதி வருகிறது, சமாதானம் வருகிறது, பேச்சுவார்த்தை வருகிறது, யுத்த நிறுத்தம் வருகிறது என்று பல தடவைகளில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டபோது தலைவர்களையும் அரசியல் நிலைப்பாடுகளையும் நம்பி ஏமாந்ததே எமது கதையாக உள்ளது.

பெரும்பான்மை அரசியல் கட்சிகள் கடந்தசில காலமாக தமிழ் மக்களை பணயம் வைத்தே வாக்குகளைக் கேட்டு வெற்றிகளைப் பெற்று தமிழ் மக்களையே பலிக்கடாவாக்கி இருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் நாமும் மாறிமாறி நம்பிக்கை வைத்து ஏமாந்துபோயுள்ளோம்.

அண்மையில் விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்கள் தமது மாவீரர் தின உரையில் “இப் பிரச்சினையைச் சமாதான வழிமுறைகள் மூலமாக தீர்க்கலாம் என்ற நம்பிக்கை இன்னும் எம்மிடம் முற்றாக இடிந்துபோகவில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் உண்மையாக உறுதியுடன் மனம் வைத்தால் சமாதானமும் இணக்கப்பாடும் ஏற்படும் சாத்தியம் உண்டு” என்று தெரிவித்திருப்பது நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் சுபீட்சமான சுதந்திரமான எதிர்காலத்தை மனதில் கொண்டு தெளிந்த மனதோடு எமது வாக்குகளை வீணாக்காமல் சரியான விதமாகப் பயன்படுத்துவோம் [illegible] தமிழ் மக்கள் சரியானவிதமாகவே பயன்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்க் கட்சிகள் கூட்டிணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றமை பாராட்டிற்குரியது. இந்த கூட்டு முயற்சியைத் தொடர்ந்தும் பாதுகாத்து பேண வேண்டியது அவசியமாகும். ஏனைய தமிழ் கட்சிகளும் இக் கூட்டணியுடன் இணைந்து தமிழ் மக்களின் விடிவுக்கு உதவ வேண்டும்.

நடந்து முடிந்த தேர்தலில் இனவாதத்தையும் வன்முறையையும் தூண்டும் விதமாக செயற்பட்ட கட்சிகள் தூக்கி எறியப்பட்டமை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் அவசரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் இனியும் இப் பிரச்சினைகளை வளர்த்து அரசியல் இலாபம் காணமுடியாது என்பதை தெளிவாக்கியுள்ளது.

புதிய பிரதமர் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள அரசு தன் மீது பொறிக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பை நீதியோடும் நடுநிலைமையோடும் அணுகி தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்தை மனதில் கொண்டு இனப்பிரச்சினையை முதன்மையான பிரச்சினையாக அணுகி இந்நாட்டில் தமிழ் மக்கள் சுதந்திரத்தோடு வாழ ஓர் நிரந்தரத் தீர்வினைத் தரவேண்டுமென புதிய பிரதமரை தமிழ் மக்கள் அனைவர் பேராலும் வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ் மக்கள் அனைவரின் ஏக்கமும் வேண்டுதலும் இதுவேயாகும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்புக்காலம் அன்பையும் அமைதியையும் சமாதானத்தையும் அறிவிக்கும் காலம். ஒருவரையொருவர் புரிந்துகொண்டு துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு மற்றவர் மனநிலைகளை ஏற்றுக்கொண்டு அன்பைப் பகிரும் காலமாகும்.

அண்மையில் யாழ். மறைமாவட்டத்தில் நடைபெற்ற இறைதியான இல்ல குணமாக்கல் வழிபாடுகளில் **(Divine Centre)** நாம் பெற்றுக்கொண்ட ஆழ்ந்த அறிவையும், ஆன்மீக அனுபவத்தையும் எம் வாழ்விலே வாழ்ந்து வழிகாட்ட முற்பட கிறிஸ்மஸ் காலம் ஒரு சிறந்த காலமாகும்.

*‘செல்வம் செல்வம் இயேசு ஆண்டவர் செல்வம். செல்வம் செல்வம் எனக்கும் உனக்கும் செல்வம். கூக்குரல் கேட்கும் என் ஆண்டவர் இறைவன் நம்மோடு இம்மானுவேல்’’* – என்னும் வார்த்தைகள் கிறிஸ்மஸ் காலத்தில் எமக்கு அர்த்தம் பொதிந்த வார்த்தைகளாகும். இவ் வார்த்தைகள் தமிழ் மக்கள் அனைவருக்கும் அமைதியையும், சமாதானத்தையும், விடுதலையையும் கொண்டுவரும் வார்த் தைகளாக இருக்க வாழ்த்துகிறோம். வேண்டுகிறோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அண்டகை
யாழ் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் அனைவர் பேராலும் அழைப்பு

## நீங்கள் நிறுத்திய இடத்தில் மீண்டும் சமாதான முயற்சிகளைத் தொடர முழு ஒத்துழைப்பை வழங்குங்கள்

### யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் மேன்மைதங்கிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது கடிதத்தில் அண்மை பொதுத்தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடைந்த தோல்வியில் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். ஜனநாயக அரசு முறையில் ஒரு கட்சி வெல்வதும் மற்றைய கட்சி தோற்பதும் தவிர்க்கப்பட முடியாதது. இப்போது 12ஆவது பொதுத் தேர்தல் முடிந்துள்ள வேளையில் தேர்தல் போட்டியையும் முரண்பாடுகளை யும் வன்முறையையும் வெறுப்பையும் கோபத்தையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். தேர்தல் சூடுபிடித்த நேரத்தில் அநேக விடயங்கள் சொல்லப்பட்டும் செய்யப்பட்டும் உள்ளன. இவற்றை நாம் சாதாரண சூழ்நிலையில் அனுமதித்திருக்க மாட்டோம்.

மக்கள் தேர்தலில் ஐ.தே.க. வாக்களித்ததன் மூலமாக மீண்டுமொரு முறை யுத்தத்தை நிறுத்தவும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவும் வேண்டும் என்பதை ஐயந்திரிபற தெளிவாக்கியுள்ளார்கள். சமாதானத்திற்கான யுத்தம் என்ற கொள்கையை அவர்கள் சரியாக வெறுத்துள்ளார்கள். யாழ்ப்பாணத்து ஆயர் என்ற வகையில் பல தடவைகளில் நாம் உங்களைச் சந்தித்துள்ளோம். நீங்களும் மகிழ்ச்சியாக வரவேற்று வடக்கு வாழ் மக்களின் அபிலாஷைகளையும் தள நிலை பற்றிய விபரங்களையும் நேரடியாக அறிக்கையிட சந்தர்ப்பம் தந்துள்ளீர்கள். இதற்கு நாங்கள் எப்போதும் நன்றியாக இருப்போம். நோர்வே அரசுடன் சமாதான பேச்சுவார்த்தை முயற்சிகளை தாங்கள் ஆரம்பித்தபோது நாங்கள் பெருமகிழ்ச்சியடைந்தோம். அச்சமாதான முயற்சியை ஆரம்பித்து வைத்தமைக்காக நன்றி கூறுகின்ற வேளையில் நீங்கள் அதில் நம்பிக்கையிழந்து இறுதியில் திடீரென அதனைக் கைவிட்டபோது நாம் பெரிதும் துக்கமடைந்தோம்.

வடகிழக்கு வாழ் மக்கள் தமிழர் கூட்டமைப்பிற்கு வாக்களித்து அரசின் திட்டத்தில் சமாதானம் முதலிடத்தை வகிக்க வேண்டுமென்பதை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெரும் எதிர்க்கட்சியாக இருப்பதால் உங்கள் தனிப்பட்ட உணர்வுகளையும் தேர்தல் தோல்வியையும் நாட்டு மக்களுக்காக ஒருபக்கத்தில் வைத்துவிடும்படி வேண்டுகிறோம்.

எல்லா அமைச்சுக்களையும் நீங்கள்நன்மனதுடன் கொடுக்க முன்வந்த அதே நன்மனத்தை சமாதான முயற்சிகளுக்காக ஒத்துழைப்பதிலும் காட்டி நீங்கள் விட்ட இடத்திலே சமாதான முயற்சிகளை தொடரவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி, நீங்கள் இரக்கமாக வேண்டிக் கொண்டபோதும் உங்களுக்கு ஆதரவளிக்க தவறியது என்பது உண்மைதான். தவறுகள் இரு பக்கங்களிலும் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அப்பாவிகளின் உயிர்கள் அன்றாடம் அரசியல் கட்சியின் பெயரால் அழிக்கப்படும்போது எமது தனிப்பட்ட உணர்வுகளில் நாம் போய்க் கொண்டிருக்க வேண்டுமா?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களை சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்து யுத் தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க ஒத்துழைக்க செய்யும்படி வடகிழக்கு வாழ் அனைத்து மக்கள் சார்பாகவும் மேன்மைதங்கிய தங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

எதிர்வரும் புத்தாண்டில் தங்கள் பணி சிறக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

*மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை,*
*யாழ். ஆயர்*

### கிளி.-முல்லை மறைக்கோட்ட மறையாசிரியர் பயிற்சியில்

# மறையாசிரியர்கள் இறைவனின் விசேட அழைப்பைப் பெற்றவர்கள்

### கிளி.-முல்லை மறைக்கோட்ட முதல்வர் தேவசகாயம் அடிகள்

கிளி. முல்லை மறைக்கோட்டத்தில் மறையாசிரியர் பயிற்சி செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 10.00 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமானது. பயிற்சி பெறவந்த 45 இளையவர்கள் கூடியிருக்க வன்னி மறைக்கோட்ட குருமுதல்வர் தேவசகாயம் அடிகளார் வன்னி மறைக்கோட்ட 8 குருக்களுடன் சேர்ந்து திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். அவர் தமது மறையுரையில் ''மறை ஆசிரியர்கள் இறைவனின் விசேட அழைப்பைப் பெற்றவர்கள் தமது முன்மாதிரியான வாழ்வினால் இறைவனை மகிமைப்படுத்த முன்வர வேண்டும்'' என்று எடுத்துக்கூறினார்.

திருப்பலியினைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திலே வன்னி மறைக்கோட்ட மறைக் கல்வி இயக்குனர் M.X. கருணாரட்ணம் அடிகள் தமது உரையில் ''இங்கு பயிற்சி பெறும் காலங்களை நல்ல முறையில் பயன்படுத்தி ஒரு சகோதர மனப்பான்மையுடன் மறைக்கல்வியின் வாழ்க்கைப் பயிற்சியினை பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று குறிப்பிட்டார். தொடர்ந்து மறைக்கல்வித் துணை இயக்குனர் A. யூட் நிக்ஷன் அடிகளார் முதலாவது பாடத்தினை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து 45 நாட்கள் விரிவுரைகள் இடம்பெற்று இறுதியாக ஒக்டோபர் மாதம் 31ம் திகதி பயிற்சியின் இறுதி நாள் நிகழ்வுகளில் காலை 11.00 மணிக்கு வன்னி மறைக்கோட்ட குருமுதல்வர் தேவசகாயம் அடிகளார் தலைமைதாங்க மறைக் கல்வி இயக்குனர் M.X.கருணாரட்ணம் அடிகளார், கியூடெக் வன்னி இயக்குனர் சூசைநாதன் அடிகளார் உட்பட 12 குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். திருப்பலியில் மறையுரையாற்றிய மறைக்கல்வி இயக்குனர் ''மறை ஆசிரியர்கள் தங்களை இறைவனிடம் அர்ப்பணித்து பங்குத் தளங்களிலும் சமூகத்திலும் தமது வாழ்வினாலும் செபத்தினாலும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக வேண்டும்'' என்று குறிப்பிட்டார். திருப்பலிக்கான ஆயத்தங்களை வட்டக்கச்சி பங்குத் தந்தை அகஸ்ரின் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.

திருப்பலியின் பின்னர் செல்வன் க.யேசுதாஸ் தலைமையில் கலை நிகழ்வுகள் ஆரம்பமானது. மறை ஆசிரியர் பயிற்சியின் அறிக்கைத் தொகுப்பு செயலாளர் செல்வி. யா.கனிஸ்ர நித்தியா அவர்களால் வாசிக்கப்பட்டது பயிற்சி பெற்ற 45 மறை ஆசிரியர்களால் நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. நிரந்தர மறை ஆசிரியர்களான S. ஆரோக்கியநாதர் கி.சா பங்கிராஸ் ஆகியோருடன் அன்புக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் ஜெயக் கொடி, றீற்றா அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மறையாசிரியர் சார்பில்
M. சான் பெனற்

### கிறிஸ்மஸ் திருப்பலி இலங்கை வானொலியில்

24ஆம் திகதி நள்ளிரவு ஆயர் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலி அகில இலங்கை வானொலியில் நேரடி ஒலிபரப்பு செய்யப்படவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ். சேவையில் யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பில் 5 அரைமணி நேர நிகழ்வுகள் ஒலிபரப்பப்பட உள்ளன.

1. கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறுதியாண்டு மாணவர்களின் நிகழ்வு 2. பாதுகாவலன் பத்திரிகையாளர் சங்கத்தினரின் நிகழ்வு 3. கொழும்புத்துறை அமலமரித் தியாகிகளின் குருமட மாணவர்களின் நிகழ்வு 4. சமாதான தூது எனும் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் நிகழ்வு 5. [illegible] நிகழ்வு அதி[illegible] [illegible].

### உன்னை நினைத்தேன் தாயே ஒலிநாடா வெளியீடு

ஹென்றியரசர் கல்லூரியின் ஆசிரியர் அ. விஜயகுமாரின் உன்னை நினைத்தேன் தாயே என்ற ஒலிநாடா அருள் தந்தையர்கள் அன்ரன் இராஜநாயகம், மகேந்திரன் இராஜநாயகம் ஆகியோரின் குருத்துவப் பணிக்கு நன்றி அர்ப்பணமாக வெளியிடப்பட்டுள்ளது.

கொழும்பில் வெளியிடப்பட்ட மேற்படி ஒலிநாடாவின் பிறிதொரு வெளியீடு 3.12.2001 அன்று யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெற்றது.

### பாதுகாவலன் சந்தாப் பணம் கட்டாதவர்களுக்கு இறுதி அறிவிப்பு

பாதுகாவலன்பத்திரிகையை தொகையாகவோ தனியாகவோ பெற்றுக்கொண்டு நீண்ட காலமாக பல அறிவித்தல்களுக்குப் பின்னரும் பணம் கட்டாதவர்களின் பெயர் விபரங்களை அடுத்த பாதுகாவலனில் வெளியிட உள்ளோம்.

இன்னும் பணம் கட்டாதவர்களுக்கான இறுதி அறிவிப்பு இதுவாகும். ஆண்டுமுடிவதற்கு முன்னர் பணத்தைக் கட்டிமுடிக்கவும். பெயர் விபரங்கள் வெளியிடப்பட்ட பின்னர் நிர்வாகத்தோடு கோபிக்க வேண்டாம்.

## வத்திக்கான் வானொலி நேயர்கள் கவனத்திற்கு

வத்திக்கான் வானொலி நேயர்களின் தமிழ்ப் பிரதேச தொடர்பாளராக அருள்திரு த. ஜெறிபெல் கிருபாகரன் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளார். வத்திக்கான் வானொலி நிகழ்ச்சிகள் தொடர்பான கடிதங்களை நேயர்கள் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

*அருள்திரு த. ஜெறிபெல் கிருபாகரன், வத்திக்கான் வானொலி நிகழ்ச்சிகள், தபால் பெட்டி எண் 02, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

நேயர்களது கடிதங்கள், கொழும்பில் அமைந்துள்ள திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவரின் பணிமனை ஊடாக, உரோமையில் அமைந்துள்ள வத்திக்கான் வானொலி அலுவலக தமிழ்ப் பிரிவுப் பணிமனைக்கு தாமதமின்றி அனுப்பிவைக்கப்படும்.

*வத்திக்கான் வானொலியின் நிகழ்ச்சிகளை பின்வரும் நேரங்களில் தினமும் கேட்கலாம்.*

காலை **7.00 31MB 9650khz**
மாலை **9.10 22MB 13765 khz**

நிகழ்ச்சிகளைக் கேட்டு கிறிஸ்துவின் நெறியில் வாழ வளர ஆசிக்கின்றோம்.

## கத்தோலிக்க எழுத்தாளர்களின் விவரம் சேகரித்தல்

இலங்கயில் கத்தோலிக்க மக்களில் பலர் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வந்துள்ளனர். சிலர் அதில் சிறந்து விளங்கியும் உள்ளனர். இன்னும் சிலர் முன்னோடிகளாகவும் விளங்கி இருக்கின்றனர். இருந்தும் கத்தோலிக்க எழுத்தாளர்களைப் பற்றிய முழுமையான விபரங்கள் கிடைப்பதற்கில்லை. அதனால் கத்தோலிக்க எழுத்தாளர் பட்டியல் ஒன்றைத் தொகுப்பதற்கு பாதுகாவலன் முனைந்து வருகின்றது. கத்தோலிக்க எழுத்தாளர்கள் தங்களுடைய பெயர், பிறந்த திகதி, முகவரி, ஆக்கங்கள் பெற்ற பரிசுகள்,விருதுகள் போன்றவற்றை எமக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். நிழற்படம் ஒன்றையும் அனுப்பிவைக்கலாம்.

மேலும் இறந்துபோன எழுத்தாளர்கள், புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஆகியோரின் விபரங்களை அறிந்திருப்பவர்கள் அவற்றைத் தந்துதவும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்

## ஏனைய கட்சிகளும் இணைய வேண்டும்

### யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

நடந்து முடிந்த தேர்தல் பற்றி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கொழும்பிலிருந்து வெளியிட்ட செய்தி.

பொதுத்தேர்தலில் தமிழ்க் கட்சிகள் கூட்டிணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றமை மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டு தற்குரியதுமாகும். இந்தக் கூட்டு முயற்சியை தொடர்ந்து பாதுகாத்து பேண வேண்டியது அவசியமாகும். தமிழ் மக்களின் எதிர்காலத்தைமனதில் கொண்டு ஏனைய தமிழ்க் கட்சிகளும் இக் கூட்டணியுடன் இணைந்து தமிழ் மக்களின் விடிவிற்கு உதவ வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புக்களை பிரதிபலித்து அவர்களின் நோக்கம், எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதத்தில் கூட்டணியினர் செயல்படவும் வேண்டும் என யாழ்.. ஆயர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட முறையில் தத்தமது கட்சிகளை வளர்க்கும் எண்ணத்தை விடுத்து கூட்டாக இணைந்து தமிழ் மக்களின் விடிவுக்கு உதவ வேண்டும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மறந்து ஒன்று பட்டு செயற்பட முன்வரவேண்டும். இது தான் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறைவையும் ஏற்படுத்தும்.

# தமிழ் ஆயர்கள் பிரதமர் சந்திப்பு

**திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை, யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆகிய மூன்று தமிழ் ஆயர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கொழும்பில் சந்தித்தனர்.**

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைக்காக கொழும்பில் கூடியிருந்த தமிழ் ஆயர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை மரியாதையின் நிமித்தம் மேற்கொண்ட இச் சந்திப்பில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற ஆணையோடு அரசு அமைத்திருக்கிறீர்கள். இப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்வு காண முழு மூச்சாக உழையுங்கள் என ஆயர்கள் பிரதமரிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

தமிழ் மக்களின் பிரச்சினையை தலையாய பிரச்சினையாக எடுத்து தீர்வு காண உழைப்பதாகவும் அனைவரும் ஒத்துழைக்கும்பட்சத்தில் நீதியோடு கூடிய ஓர் நிரந்தரத் தீர்வை அமைக்க முடியுமெனவும் அவர் வாக்களித்தார்.

# பொதுநிலையினருக்கான வேதாகம கற்றல் வகுப்புக்கள் மீண்டும் 2002 தை மாதத்தில்

- 6மாத காலப் பயிற்சி நிறைவு
- 93 பேர் பங்குபற்றினர்
- 50பேருக்கு சான்றிதழ்
- பழைய ஏற்பாட்டு வகுப்புக்கள் ஆரம்பம்
- பங்குத் தந்தையர் மூலமாக உடன் விண்ணப்பிக்கவும்

பொதுநிலையினர் உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் வாழ்வதற்கு வேதாகமத்தை நன்கு அறிய வேண்டும். அதன் படி வாழ வேண்டும். அதனை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். இவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு பொதுநிலையினருக்கான வேதாகம (புதிய ஏற்பாடு) கற்றல் வகுப்புக்கள் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் 30.6.2001ல் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய 20 சனிக்கிழமைகள் இடம்பெற்று 15.12.2001ல் பூர்த்தியடைந்துள்ளன. ஏறக்குறைய 50 பொதுநிலையினர் யாழ். மறைமாவட்டத்தில் இருந்து நிறைவாகப் பயிற்சி பெற்று எதிர் வரும் தை மாதத்தில் தமக்குரிய சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் தலைவர் அருள்திரு R.H சகாயநாயகம் அடிகளாரின் நெறிப்படுத்தலில் புனித சவேரியார் பெரிய குருமட விவிலிய விரிவுரையாளர்களும் மறையாசிரியர்களும் இந்த விவிலியப் பயிற்சியை வழங்கியுள்ளார்கள். தொடர்ந்து எதிர்வரும் தை மாதத்தில் பொதுநிலையினருக்கான (பழைய ஏற்பாடு) வேதாகம கற்றல் வகுப்புகள் இடம்பெறவுள்ளன என்றும், ஆர்வமுள்ளோர் தமது பங்குத் தந்தையர் ஊடாக விண்ணப்பித்து கற்றுப் பயனடையுமாறும் ஆணைக்குழு வேண்டுகிறது.

# தமிழ்கட்சிகளின் கூட்டமைப்பு யாழ். மன்னார் ஆயர்களை சந்திப்பு

பொதுத் தேர்தலில் வெற்றியடைந்த தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பினர் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையையும் சந்தித்து உரையாடினர்.

அவ் உரையாடலின்போது தாம் அரசுடன் இணையப்போவதில்லை என்றும் வெளியே இருந்து மக்களுக்கு பணியாற்றப் போவதாகவும் தெரிவித்தனர்.

ஆயர்கள் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு ஒரு முடிவுகாண உழைக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். அப்போது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வுகாண தம்மாலான சகல முயற்சிகளையும் ஆதரவையும் அரசுக்கு வழங்க தாம் தயாராக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான சந்திரசேகரன், ராதாகிருஷ்ணன் ஆகியோரும் ஆயர்களை தனிமையாகச் சந்தித்து உரையாடினர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் தாம் முழுமையாக எல்லோருடனும் இணைந்து உழைக்கப் போவதாக அவர்கள் ஆயர்களுக்கு வாக்குறுதி கொடுத்தனர்.

யாழ்.மாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு நடாத்திய

# பொதுநிலையினர் தினம் - 2001 கட்டுரைப் போட்டி முடிவுகள்

1. திருமதி ஏஞ்சலீன் றோமி பிறின்ஸ் – பாசையூர் பங்கு
2. திரு. பி. அன்ரன் ஜெயராஜா – நெடுந்தீவு
3. திருமதி றோஸ் இராஜரட்ணம் – **O.L.R.** யாழ்ப்பாணம்

**ஆறுதல் பரிசுகள் பெறுவோர் விபரம்**

1. எஸ்.பி. அருளப்பு – நெடுந்தீவு
2. நீ. மரீனா – பண்டத்தரிப்பு
3. திரு லூமின் பொன்சேகா எமிலியான் இராஜநாயகம் – சக் கோட்டை (பருத்தித்துறை)
4. எ.க. மேரி அருள்மதி – மல்வம் உடுவில்
5. அ. அன்றூாஸ் – நெடுந்தீவு

**பெ. பிரான்சீஸ்**
**செயலர்**

# தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்க இலக்கியப் போட்டி முடிவுகள் – 2001

தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடத்திய 2001ஆம் ஆண்டுக்கான இலக்கியப் போட்டியின் முடிவுகள்.

*சிறுகதை:* மனமாற்றம், செல்வி பெர்ணடேட் ருக்ஷிலா பர்ணாந்து, ஆண்டு 12 **T3**, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.

*கவிதை:* (2000–2001 காலப் பகுதியில் பத்திரிகையில் வெளிவந்தது) யுத்தம் இல்லாத பூமி ஒன்றிலே... *(பாதுகாவலன்)*, திருமதி மரியநாயகி மரியதாஸ் (நவாலியூர் நாயகி),பாரதி நிலையம், நவாலி தெற்கு, மானிப்பாய்.

*கவிதை:* (முன்னர் வெளிவராதது), வாழ்வு பெற, திரு லோறன்ஸ் செல்வநாயகம், 57/6, பொல்ஹென் கொட லேன், கொழும்பு 5.

சான்றிதழ்கள் டிசெம்பர் 15ம் திகதி கொழும்பு 7 ஆனந்த குமாரசாமி வீதியிலுள்ள மகாவெலி நிலையத்தில் தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தின் விழாவின்போது வழங்கப்பட்டது:

# மறைப் பணி புரிந்த மாமேதை நூல் வெளியீடு

செபமாலை அன்புராசா அடிகளாரின் மறைப்பணி புரிந்த மாமேதை எனும் தலைப்பில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அமதி அடிகளாரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய நூலொன்று அண்மையில் வெளியிடப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு உகந்ததாக வெளியிடப்பட்ட இந்த அமல மரித்தியாகிகளின் வெளியீட்டு நூலின் விலை ரூபா. 50 மட்டுமே.

# அன்புக் காணிக்கை ஒலிநாடா வெளியீடு

9.12.2001 அன்று செ. அன்புராசா அமதி அடிகளாரின் அன்புக் காணிக்கை என்ற ஒலிநாடா தொடர்பகத்தில் டேமியன் அடிகளாரின் தலைமையில் வெளியிடப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் ஆன்ம குருவாகப் பணியாற்றிவருகின்ற செபமாலை அன்புராசா அமதி அடிகளாரின் எண்ணங்களையும், இராகங்களையும் இசைப் பேழையாக்கி அமதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

அமதிகளின் வட மாகாண முதல்வர் ஜீவேந்திராபோல் அடிகளாரின் ஆசியுரையுடன் தொடங்கும் இந்த ஒலிநாடாவில் அருள் தந்தையர்கள் அன்புராசா, றெக்ஸ் சவுந்தரா, ஜோர்ஜ் றெஜினோல்ட், மைக்கல் சவுந்தரநாயகம், அமலதாஸ் ஆகியோர் உட்பட வேறு பலரும் பாடல்களைப் பாடியுள்ளனர்.

# அன்பிய தேசிய நிகழ்வு ASIPA 2001

### யாழ். மறைமாவட்ட அன்பிய இயக்குனர் சாள்ஸ் கொலின்ஸ் அடிகள் கலந்துகொண்டார்

கார்த்திகை மாதம் 26ஆம், 27ஆம் திகதி கொழும்பு, ராகம, தேவத்தை பேராலய தியான இல்லத்தில் இலங்கையிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களிலுமிருந்து அன்பிய இயக்குனர்களும் ஊக்குவிப்பாளர்களும் இவ் அன்பிய தேசிய நிகழ்வில் கலந்துகொண்டார்கள். இவ் இருநாள் நிகழ்வுகளிலும் தமது மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும் அன்பிய நிகழ்வு பற்றி தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார்கள். எல்லா மறைமாவட்டங்களிலும் பங்குகளிலும் அவ் அன்பியம் ஆரம்பிக்கப்பட்டதையிட்டும் தொடர்ந்து பங்குத் தந்தையர் எடுக்கின்ற முயற்சி பற்றியும் இறைமக்களுடைய உற்சாகம் பற்றியும் பாராட்டினார்கள். இன்னும் இதற்கான வழிகாட்டுதல்களும் தொடர்ந்தும் எல்லாப் பங்குகளிலும் கொடுக்கப்பட வேண்டுமென்று அனைவரும் கேட்டுக்கொண்டார்கள்.

தொடர்ந்து 28, 29ஆம் திகதிகளில் அன்பிய தேசிய வருடாந்த கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து மறைமாவட்ட இயக்குனர்களும் கலந்துகொண்டார்கள். இந் நிகழ்வில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற அன்பிய நிகழ்வு பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது. திரு தியான நிகழ்வுகள் நடைபெற்றதையிட்டு நிறைவடைந்ததுடன் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றியும் அதை மேற்கொள்ள தேவையான ஆலோசனைகளும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. 2002 ஆம் ஆண்டு இன்னும் உற்சாகத்துடனும் அர்த்தத்துடனும் இவ் அன்பிய நிகழ்வை மேற்கொள்ள அனைத்து இயக்குனர்களும் உற்சாகம் கொடுப்பதாக தெரிவித்தார்கள். இதற்கு பங்குத்தந்தையர்களுடைய முழு ஒத்துழைப்பையும் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று ஆசித்தார்கள்.

மலரும் புத்தாண்டில் புதிய திருச்சபையை நோக்கி அனைவரும் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் செல்லுவதற்கு அனைவருடைய செபங்களும் ஒத்துழைப்பும் இதற்கு உதவியாக அமையும் என்பதும் தேசிய அன்பிய நிலை பற்றி முழுமையாகப் பகிர்ந்துகொண்டர். இவ் இக்கட்டான சூழ்நிலையிலும் எமது இறைமக்கள் முழுமையான விசுவாசத்தோடும் முழுமையான நம்பிக்கையோடும் அன்பிய செயற்பாடுகளிலும் ஈடுபடுவது பற்றி ஆச்சரியமடைந்ததுடன் திறமையாகப் பாராட்டினார்கள்.

தேசிய நிகழ்விற்கு குருக்கள், பொதுநிலையினர் அடங்கலாக 36 அங்கத்தவர்களும், தேசிய அன்பியக் கூட்டத்திற்கு அனைத்து மறைமாவட்ட இயக்குனர்களும் பொதுநிலையினருமாக 11அங்கத்தவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அத்துடன் அடுத்த வருடத்திற்கான அன்பிய நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் இயேசுவின் குழந்தைப் பருவ விவரணங்களின் பின்னணிக் காரணிகள்

அருள்திரு சா.யோ.கு. ஜெயறஞ்சன்

தற்கால விவிலிய ஆய்வாளர்களின் கருத்துப்படி காலத்தால் முந்தியதாக, முதலில் எழுத்துருப் பெற்றதாகக் கொள்ளப்படும் மாற்கு நற்செய்தியானது, நற்செய்தியாளர் மத்தேயுவுக்கும், லூக்காவுக்கும் ஆதார நூலாக அமைந்திருந்தது. மாற்கு நற்செய்தி நான்கு நற்செய்திகளுள்ளும் முந்தியது என்ற நிலையில் குறைந்தளவு அதிகாரங்களை (16) உடையதாகவும், அழகுபடுத்தல்கள், ஆலாவர்ணனைகள் மற்றும் விபரிப்புத் தன்மை சற்றுக் குறைந்ததாகவும் ஆனால் உயிர்த்துடிப்பு மிகுந்ததாகவும் காணப்படுகிறது. கலாபனைகளால் நம்பிக்கையில் தளர்வுறும் மக்களுக்கு உறுதியூட்ட விரைந் தெழுதப்பட்ட இந்நற்செய்தி இயேசுவின் பகிரங்கப் பணி யோடு ஆரம்பித்து அவரின் போதனைகளைவிட சாதனைகளை அதிகளவில் சாற்றி நிற்கின்றது. எனவே மாற்கு நற்செய்தியின் அடிப்படையில் நோக்கும்போது இயேசு மெசியாவாகியது அவரது திருமுழுக்கு வேளையிலிருந்து (மாற்கு1:9–11) என்று கொள்ள வைக்கிறது.

மாற்கு நற்செய்தியை மூல நூலாகத் தழுவி மத்தேயு, லூக்கா தமது நற்செய்தியினை வடிவமைத்த வேளையில் முதல் நற்செய்தி பாவனைக்கு வந்து சில ஆண்டுகள் கடந்திருக்கக்கூடிய நிலையில், இறையியல், கிறிஸ்தியல் சார்ந்த விளக்கங்கள் மென்மேலும் வளரத் தொடங்கின. இந்நிலையில் மாற்கு கொள்வது போன்று இயேசு மெசியாவாகியது அவரது திருமுழுக்கோடு மட்டுமன்று, மாறாக அன்னை மரியாவின் வயிற்றில் அவர் கருவாகி உருவான அந்தக் கணப் பொழுதிலிருந்தே மெசியாவாக உள்ளார் என்பதை எண்பிக்க வேண்டிய இறையியல் தேவை பிற்பட்ட நற்செய்தியாளர்களுக்கு எழுந்தது. எனவே மத்தேயுவும், லூக்காவும் தமக்கேயுரிய பாணியில் இயேசுவின் குழந்தைப்பருவ நிகழ்வுகளை விபரித்து, அவர் தமது பிறப்பிலிருந்தே மெசியாவாக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றனர். இது எவ்வகையிலும் மாற்கு நற்செய்தியுடனான ஒரு முரண்பாடாக அல்ல, மாறாக நாளுக்கு நாள் அன்று வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த கிறிஸ்தியலின் பரிணாமம் எனவே கொள்ளப்பட வேண்டியதாகும். மத்தேயுவின் முதலிரு அதிகாரங்களிலும், லூக்காவின் முதலிரு அதிகாரங்களிலும் இயேசுவின் குழந்தைப் பருவ விவரணங்கள் காணக் கிடைக்கின்றன.

**மத்தேயுவினதும், லூக்காவினதும் விவரணங்கள் வேறுபடுவது எவ்வாறு?**

ஒவ்வொரு நற்செய்தியாளரும் தத்தம் நற்செய்தியைத் தொகுத்த பொழுது, நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்து ஒழுங்கமைத்த போது தமக்குரிய இறையியல் அன்றேல் வரலாற்றுச் சிக்கல்களை தீர்ப்பதில், தமது விசுவாசக் குழுமத்தின் தேவைகளை நிறைவாக்குவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். இதுவே அவர்களிடையான நிகழ்வுகள் வேறுபடக் காரணமாயமைந்தது. மேலும் ஒவ்வொரு நற்செய்தியாளரும் தனித்துவமான முறையில் வழங்க விரும்பிய இயேசு பற்றிய இறையியல் போக்குக்கும், நோக்குக்கும் அமையவே நடந்த நிகழ்வுகளைத் தெரிவு செய்து வரிசைப்படுத்தினர்.

இதுவும் வேறுபாடுகளுக்கு வழிவகுத்தது. மத்தேயு நற்செய்தியிலும் (மத்1:1–17) லூக்கா நற்செய்தியிலும் (லூக் 3:23–38) இயேசுவின் மூதாதையர் பட்டியல் உள்ளது. யூதக்கிறிஸ்தவர்களுக்காகத் தமது நற்செய்தியை எழுதிய மத்தேயு அவர்கள் தம் இனத்தின் தந்தை எனக் கொள்ளும் ஆபிரகாமிலிருந்து இயேசுவின் தலைமுறைப் பட்டியலை ஆரம்பிக்கின்றார். இறை மீட்பு உலகினர் அனைவருக்கும் உரியது. என்ற கொள்கை உறுதியோடு பிறஇனத்தவர்களை மனக்கண் முன்கொண்டு லூக்கா வரைந்த நற்செய்தியில் இயேசுவின் மூதாதையர் பட்டிய லானது முழு மனித குலத்தின் முதல் தந்தையான ஆதா மிலிருந்து ஆரம்பிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

மத்தேயு நற்செய்தியின் இரண்டாம் அதிகாரத்தின் கருப்பொருளாய் அமைவது யாதெனில் யூதர்களின் அரசராக இயேசு பிறந்துள்ளார் (மத்2:3) எனக் கேட்டதிலி ருந்து ஏரோது அரசன் கொண்ட சீற்றமும், பதட்டமுமாகும். அக்காலத்தில் பலரும் ''தாமே மெசியா'' என்று குள்ளத்தனமாக அத்தலைப்பை, பெருமையைத் தமதாக்க விழைந்து நின்றனர். இவ்வகையில் ஏரோது அரசனும் தனக்குரிய கூட்டத்தினரோடு தன்னை மெசியாவாகக் கருதிய தப்பிதத்தைத் தவிடு பொடியாக்கிட உண்மையை நிலைநாட்டுவது ஆசிரியரின் நோக்காகும். அதற்கமைய மத்தேயு இயேசுவின் மூதாதையர் பட்டியலை வழங்கி இஸ்ரயேலுக்கு முன்னறிவிக்கப்பட்டு, தாவீது அரச குலத்தில் வந்துதித்து, மெசியா பற்றிய பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புகளை நிறைவாக்கி அதற்கு உரித்தாகுபவர் இயேசு ஒருவரே. ஏரோதுவுக்கு அங்கு கிஞ்சித்தும் இடமில்லை என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார். அத்தோடு கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட யூத குலத்தினுள் பிறந்த இயேசுவுக்கு எதிராக அவரது இனத்தினரும், அதேவேளையில் பிறஇனத்தினர் அவருக்குச் சார்பாகி இறைமீட்புக்குத் தகுதியுள்ளவர்களாகின்றனர் என்ற தம் இறையியல் கருத்துக்கு இங்கு ஆசிரியர் முன்சுவையூட்டும் நிகழ்வுகளைத் தருகின்றார். மீட்புக்கு ஒருவர் தகுதியாவது பிறப்பின் வழி மூலம் அல்ல, வாழ்வின் வழிமூலமே என்பதை அழுத்தம் திருத்தமாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

லூக்கா வழங்கும் இயேசுவின் பிறப்பு விவரணத்தில், இயேசுவின் பிறப்பு முன்னறிவிப்பு, அவரின் பிறப்பு நிகழ்வோடு சமாந்தரமாக திருமுழுக்கு யோவானின் பிறப்பு முன்னறிவிப்பு, அவரின் பிறப்பு நிகழ்வு தரப்படுகிறது. இதற்கக் காரணம் யாதெனில் நற்செய்தி உருபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் திருமுழுக்கு யோவானின் சீடர்களுக்குக்கும், இயேசுவின் சீடர்களுக்குமிடையில் ''யார் முதன்மை யானவர்?'' என்ற போட்டி சர்ச்சைக்குரியதாக இருந்து வந்தது. எனவே இதற்குரிய தீர்வை வழங்கி உண்மையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை ஆசிரியருக்கிருந்தது. இறை மீட்புத் திட்டத்தில் இவ்விருவரும் சிறப்புப் பங்காற்றினரெனினும், இயேசுவே முதன்மையானவர். காரணம் அவர் பிறப்பு தூய ஆவியின் வல்லமையால் நிகழ்வதும் (லூக் 1:35) மரியாவின் வருகையில் எலிசபேத் மகிழ்ந்து நின்ற வேளை, அவளது வயிற்றின் கனியின் துள்ளல் (லூக் 1:41) தன்னை விடப் பெரியவரான தெய்வத் திருமகனின் வருகையின் பூரிப்பில் புளகாங்கிதம் அடைவதும் இயேசுவின் முதன்மைத் தன்மையைப் பறைசாற்றுகின்றன.

# கானம் பிறந்த கதை

சாமுவேல் பெனடிக்ற்

கிறிஸ்மஸ் காலங்களில் அனைத்துலகிலும் ஒலிக்கும் ஒரு கீதம் **HOLY NIGHT, SILENT NIGHT** அது பிறந்த கதை ஆச்சரியம் நிறைந்தது.

ஒல்லாந்து நாட்டிலே, சில நூற்றாண்டுகட்கு முன்பு சிறு மலைகள் நிரம்பிய ஒரு கிராமம். அக்கிராமத்தில் அழகு மிக்க ஒரு கோவில். அக்கோவிலின் ''ஆர்மோனியம்'' என்ற பெரிய வாத்தியத்தில் நாதம் எழுப்பும் தோல் நாடாக்களை கிறிஸ்மஸ் நெருங்கிய நாட்களில் எலிகள் கடித்துப் பலத்த சேதத்தை உண்டாக்கிவிட்டன.

அன்று டிசம்பர் 23ம் *நாள் மாலை நேரம் பங்குக்குரு மோகர் அடிகளுக்கு ஒரே கவலை. கிறிஸ்மஸ் இரவில் விசேட நள்ளிரவு வழிபாடுகட்கு வாத்தியக் கருவி இல்லை என்பதால் அத்தருணம் வாயில் மணி ஒலித்தது.*

மலைக் கிராமமொன்றிலிருந்து வந்த இருவர் அங்கு நின்றனர். ஒரு இளந்தாய் பிரசவித்திருப்பதாகவும் புதிய குழந்தைக்கு திருமுழுக்காட்டவும், தாயையும் சேயையும் ஆசீர்வதிக்கவும் அவர்கள் குருவை அழைத்தனர். மோகர் அடிகள் தம்மேலங்கியை அணிந்து தொப்பியை தலையில் மாட்டிக் கொண்டார். அருட்சாதனங்கள் வழங்கும் கைப்பையைத் தூக்கிக்கொண்டு அவர்களோடு புறப்பட்டார். பூரண நிலவு பனிமழை பொழிந்து கொண்டிருந்தது அரைமணி நேரம் குன்றுகளில் ஏறியும் இறங்கியும் பயணம் செய்து குறிப்பிட்ட வீட்டுக்கு வந்தனர். வைக்கோலால் வேயப்பட்ட ஒரு குடிசையின் வாயிலில் ஒரு வாலிபன் மோகர் அடிகளை வரவேற்றான்.

அவனுக்கு ஆசியுரைத்து குடிசைக்குள் சென்றார். ஒருபுறம் தச்சுவேலைத் தளபாடங்கள் மறுபுறம் ஒரு மரக்கட்டில் பக்கத்தில் ஒரு தொட்டில் கட்டிலும் தொட்டிலும் வைக்கோலையே மெத்தையாக் கொண்டிருந்தன.

குருவைக் கண்டதும் அந்த இளந்தாய் எழுந்து ஆசாரம் செய்தபின் பெருமிதத்துடன் தொட்டிலில் கிடந்த தன் தலைச்சன் குழந்தையைக் கைகளிலேந்தி நின்றாள். மோகர் அடிகளின் மனம் பெத்லகேமின் காட்சியை எண்ணியது.

குழந்தைக்குத் திருமுழுக்காட்டி அந்த இளம் குடும்பத்தை ஆசீர்வதித்தபின் அடிகளார் புறப்பட்டார். மீண்டும் தமது இல்லத்தை நோக்கி, பனிமழையில் குன்றுகளில் ஏறியும் இறங்கியும் பயணம் செய்தார். அவரது கற்பனை விரிந்தது முதல் கிறிஸ்மஸ் காலத்தில் பெத்தலகேம் குகைத் திருக்குடும்பத்தையும் இந்த மலையடிவாரக் குடும் பத்தையும் ஒப்புநோக்க அவரது கவிதையுள்ளம் பாடலொன்றைப் பின்னிப் பிணைத்தது. வீடு சென்றதும் ஒரு தாளை எடுத்தார் **HOLY NIGHT, SILENT NIGHT ALL IS CALM,** புனிதமான இரவு, அமைதியான இரவு, என்று தொடங்கும் பாடலை எழுதி முடித்தபின்பே படுக்கைக்குச் சென்றார்.

24ஆம் நாள் காலை, மோகர் அடிகள், ஆசிரியர் குருபரின் இல்லம் சென்றார். குருபர் ஒரு இசைக்கலைஞர். கோவில்பாடகர் குழுவின் தலைவர். ஆர்மோனியம் வாசிப்பதும் அவரே. இப் பாடலை அவர் கண்டதும், மகிழ்ச்சி பொங்க, தமது கிதார் வாத்தியத்தைக் கொண்டு வந்தார். **HOLY NIGHT, SILENT NIGHT** என்ற கானம் இசையமைப்பைப் பெற்றது.

24ஆம் நாள் இரவு மணி 11.45 இந்தக் கிறிஸ்மஸ் விழாவில் ஆர்மோனியம் இசைக் காதே என்ற ஆதங்கத்துடன் கோவிலில் பக்தர்கள் கூடிய வேளை குருபரின் கீதார் வாத்தியம் இசைத்தது. மோகர் அடிகளும் குருபரும் புனிதமான இரவு அமைதியான இரவு என்ற கீதத்தை இசைத்தனர் பக்தர்களின் பாராட்டுகளையும் பெற்றனர்.

காலம் உருண்டடோடியது இந்த அழகிய கீதம் அயற் கிராமங்கட்கும் பரவியது ஏனைய நாடுகட்கும் பறந்தது பல்வேறு மொழிகளில் பெயர்க்கப்பட்டது. எனினும் ஆசிரியர் குருபரின் இசையமைப்பில் மாறுபடவேயில்லை.

வயது முதிர்ந்த நிலையில் தாடியும் மீசையுமாக தம் வீட்டுச் சாய்மனைக் கதிரையில் படுத்திருந்த குருபர் வாசலில் பெரும் ஆரவாரம் கேட்டு எழுந்தார். அரச வாகனங்களும் சமஸ்தான பிரமுகர்களும் அவரிடம் வந்து அவரது பாடலுக்காக ஒல்லாந்த அரசர் அவருக்கு பட்டமளித்து கௌரவிக்கப்போவதை அறிவித்த போது ஆனந்தக் கண்ணீர் வடித்தார் குருபர். இன்றும் ஒல்லாந்து ஹேக் நகர அருஞ்சுவடிகள் காப்ப கத்தில் மோதரின் கைப்பட எழுதப்பட்ட இப்பாடலையும் குருபரின் கையால் வரையப் பட்ட இசையமைப்பையும் பத்திரமாக பாதுகாத்து வருகிறார்கள். இக் கிறிஸ்மஸ் காலத்தில் அனைத்துலக வானொலிகளில், கிறிஸ்தவ ஆலயங்களில் வீடுகளில் கிறிஸ்மஸ் வைபங்களில் இக்கீதம் பலமொழிகளில் ஒலிக்கப்படுவது நிச்சயம்.

# இயேசு பாலன் பிறக்க இடம் தருவாயா?

சகோ. இ.பெ. தயாபரன்
புனித சவேரியார் குருமடம்,
தியான இல்லம், பண்டத்தரிப்பு

*நல்ல ஆயனாகிய இயேசு பாலகன் எம் உள்ளத்தில் பிறக்க விரும்புகிறார் இடம் கொடுக்க நாம் தயாரா?* பழைய ஏற்பாட்டில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய ஆயர்கள் தமது பணிக்கு பிரமாணிக்கமற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் மந்தைகளை மேய்க்காமல் தங்களையே மேய்த்துக் கொண்டார்கள். மந்தைகளை கொடுமையுடனும் வன்முறையுடனும் நடத்தினார்கள். மந்தைகளை சிதறடித்தார்கள். இதனால் இறைவன் இத்தகைய ஆயர்களைக் கடிந்து அவர்களை நீக்கிவிட்டு எல்லா மந்தைகளை ஒன்று சேர்க்கும் ஒரு நல்ல ஆயனை அனுப்புவதாக வாக்களித்தார். இந்த நல்ல ஆயன்தான் எசாயா இறைவாக்கினர் சுட்டிக்காட்டிய ஆண்மகன். *''இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகவை பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் இம்மானுவேல் என பெயரிடுவர்''* (எசா 7:14).

இயேசு பாலகனை பெற்றெடுக்க புனித கன்னிமரியாளும் புனித யோசேப்பும் பெத்லகேமில் உள்ள விடுதிகளுக்கு சென்று இடம் கேட்டபோது அவர்களுக்கு இடம்கொடுக்க எல்லோரும் மறுத்துவிட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஏழைகளாக இருந்தனர். விடுதி செலவினை செலுத்த முடியாதவர்களாக இருந்தனர் விடுதிகளின் அறைகள் எல்லாம் ஏற்கனவே வசதிபடைத்தவர்களுக்கென பதிவு செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் தான் நலிந்தவற்றை திடப்படுத்துகின்ற, பிணியுற்றவற்றை குணப்படுத்துகின்ற, காயப்படுத்தப்பட்டவற்றிற்கு கட்டுப்போடுகின்ற, காணாமல் போனவற்றை தேடுகின்ற, மந்தைகளுக்காக உயிரைக் கொடுக்கின்ற நல்ல ஆயனாகிய இயேசு பாலகன் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து தீவனத் தொட்டியில் வளர்த்தப்பட்டார்.

அன்று உலகை மீட்க பிறந்த நல்ல ஆயனாகிய இயேசு பாலகன் பிறக்க விடுதி உரிமையாளர்கள் இடம் கொடுக்கவில்லை ஏனெனில் அவர்களுக்கு பணம் தேவைப்பட்டது, வசதி படைத்தவர்களின் வரவு தேவைப்பட்டது. ஆனால் இன்று எமது உள்ளத்தில் இயேசு பாலகன் பிறக்க விரும்புகிறார். இடம் கேட்கிறார். எம் உள்ளத்தைக் கொடுக்க நாம் தயாரா? எம் உள்ளத்தில் ஓர் இடம்கொடுத்துவிட்டால் அவர் எம் முழு உள்ளத்திலும் குடிகொண்டு எம்முடைய உலகியல் திட்டங்கள், எதிர்பார்ப்புக்கள், ஆசைகள், ஏக்கங்கள் எல்லாவற்றையும் மாற்றிவிடுவார் என எண்ணி பின்நிற்கின்றோம். ஆனால் அவரோ எம் உள்ளத்தில் பிறக்க எம் உள்ளக் கதவுகளை தட்டிக்கொண்டே இருக்கிறார்.

எம்முடைய உள்ளத்தினை திறந்துவிட்டு நல்ல ஆயனாகிய இயேசு பாலன் எம் உள்ளத்தில் அனுமதிக்கும் போதுதான் நாம் நினைவுகூருகின்ற, கொண்டாடுகின்ற கிறிஸ்து பிறப்பு விழா அர்த்தம் உள்ளதாக அமையும். அப்போது எம் உள்ளத்தில் பிறக்கின்ற அந்த நல்ல ஆயன் எம் துன்பங்கள், துயரங்கள், கவலைகள் எல்லாவற்றையும் போக்குவார். காயப்பட்ட எம் உள்ளத்தினை குணப்படுத்துவார். அமைதியின்றி நிம்மதியின்றி அலையும் மந்தையாகிய எம்மை தம் அன்பால் அரவணைத்து அமைதியைத் தருவார். காணாமல்போன பிரிந்துபோன உறவுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து மகிழ்வைத் தருவார்.

நல்ல ஆயனாகிய இயேசு பாலகன் எம் உள்ளத்திலுள்ள திட்டங்கள், ஆசைகள், ஏக்கங்கள் எல்லாவற்றையும் தம் திட்டத்தின்படி மாற்றி உள்ளத்தில் பிறந்து குடியிருக்க எம் உள்ளத்தை திறந்து வைப்போம் அவரது பிறப்பின் செய்தி எம் எல்லோருக்கும் மகிழ்வையும் அமைதியையும் தருவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேம்பாவணி தரும் மீட்பர் பிறப்பு

எம்.டி. சூசைநாதர்

விலக்கிய கனியை உண்டதனால் விளைந்த பாவத்தைப் போக்கி உலக மக்களை மீட்கும் வண்ணம் கன்னி வயிற்றில் மீட்பர் பிறப்பார் எனும் இறைவாக்கு எப்போ நிறைவேறுமென்று ஞானிகள் காத்திருந்தனர். ''கான்இறைஞ்சிய நல்தவக் காவலன்'' சூசையும் பாவத்தின் விளைவால் மன்னுயிர்கள் அனைத்திற்கும் அன்பு எனும் புண்ணியம் இல்லாது போய்விட்டதே என்னு வருந்தினான். ''இது எனது பொருள்'', ''உது உனது பொருள்'' என்ற வேற்றுமையும், பொருள் ஆசையும் மக்கள் மத்தியில் மலிந்ததைக் கண்டு உளம் நொந்தான். அன்பு கலந்த நட்பு இல்லையே! சூதும் வாதுமே அனைவர் உள்ளத்திலும் நிலைகொண்டதால் நல்ல நூல்கள் கூறும் ஒழுக்கநெறிகள் நலிந்தனவே! மக்கள் தீய செயல்களையே புரிய விருப்பங்கொண்டுவிட்டதால் இவ் உலகில் உன்னத இன்பங்கள் ஒழிந்துவிட்டனவே என மனிதரின் பாவத்தை நினைந்து இறைவனை வேண்டினான்.

**ஒன்றாய் ஆளும் அரசே என் உயிர்க்கு ஓர் நிலையே!**
**தயைக்கடலே!**
**குன்றா ஒளியெ! ஆருட்பரனே! குணுங்கு இங்கு ஓச்சும்**
**கொடுங்கோன்மை**
**பின்றா வினைசெய்வது நன்றோ பிறந்து அப்**
**பகையைத் தீர்த்து அளிப்பச்**
**சென்றால் ஆகாதோ? இரக்கஞ் செய்யக் குணிந்த நாள்**
**எவனே?**

*(குணுங்கு–பேய், பின்றா–தோல்வியில்லாது, குணித்த நாள்–குறித்த நாள்)*

உலகனைத்தையும் ஒன்றாய் ஆளும் அரசே! என்உயிர் நிலைத்து வாழ்வதற்கு ஆதாரமாய் உள்ளவனே! கருணைக் கடலே! குன்றாத ஒளியே! அருள் நிறைந்தவனே! இங்கு கொடுஞ்கோலோச்சும் பேய் தோல்வியே காணாது, அது தனது பகைவினையைச் செய்ய விடுதல் நன்றோ ஆண்டவனே! இவ்வுலகில் நீர் பிறந்து அப் பகைவனை முறியடித்து இவ்வுலக மக்களை மீட்கக் கூடாதோ? எங்கள் மேல் நீர் இரக்கங் காட்டக் குறித்த நாள் எதுவோ? என்று மன்றாடினான்.

இவ்வாறு வளன் இறைவனை வேண்டி நிற்க, மூன்று வயது முதல் கோவில் வழிபாட்டிலும், தொண்டிலும் ஈடுபட்டு என்றும் கன்னியாய் வாழும் நோன்பு பூண்டு ஆண்டவரின் வருகையை எதிர்பார்த்து இறைவனை வேண்டலானாள் மரியாள்.

**இன்னான் இன்னயாவும் உரைத்து ஏங்கி ஏங்கி அழுகின்ற**
**அந்நாள் அன்ன உரைக்கு இசையாய் அன்பு தூண்டும் அரிய நசை**
**தன்னால் உன்னப் பொருவு அற்ற தரும கன்னிமரி என்பாள்**
**பல்நாள் துன்னாத அருள்புரியப் பரமன் எய்த வேண்டினனே**

*(பொருவு அற்ற–நிகரற்ற)*

இவ்வாறாக வளன் ஏங்கி ஏங்கி அழுகின்ற அந்நாளிலே வ்ளனின் அந்த வேண்டுதலுக்கு உகந்த முறையிலே, தனக்கு ஒப்பு உவமையாக உரைக்கமுடியாத அறச் செல்வியாகிய கன்னி மரியாள் அன்பு தூண்டு அரிய ஆசை மேலோங்க பன் நெடுங்காலமாக மனித குலம் அடையாதிருக்கின்ற மீட்பரின் அவதாரப் பேற்றை அருளுமாறு இறைவனை வேண்டினாள்.

அன்பு ததும்பும் சொற்களால் அவ் இருவருடைய வேண்டல்களையும் கேட்ட இறைவன், 'நல்லது' என்று மனம் இரங்கி மண்ணுலகை மீட்கும் தனது திட்டத்தை நிறைவேற்ற விருப்பங் கொண்டார். மக்களை மீட்கத் தானும் ஒரு குழந்தையாக இம் மண்ணுலகில் தோன்றுவதற்கு இவ் இருவரையும் திருமணத்தால் இல்லறத்தில் இணைக்கத் திருவுளம் கொண்டார். தூய மனம், அறிவு, மனவலிமை தெய்வஅருள், வல்லமை மாண்பு, துணிவு சிந்தனைத் திறன் ஆகிய அழியாத வரங்களையெல்லாம் ஒன்றாய்ப் பெற்றிருப்பவளும், மூன்றாம் வயதில் எருசலேம் கோவிலை அடைந்து நாள்தோறும் தவறாமல் தன்னை ஆராதிப்பவளும் அத்தால் வேதம் போன்று நிலையான ஞானஒளி பெற்றவளும் பதினான்கு வயதினனாய் விளங்குபவளுமாகிய கன்னி மரியாளிடம் விண்ணுலகும், மண்ணுலகும் மகிழ்வுறும் அச்செய்தியை இசைத்துரைக்குமாறு வானதூதரை அனுப்பினார். வானவனும் மரியாளிடம் தூதுரைத்தான்.

**வான் செய்த சுடர் ஏய்க்கும் வடிவொடு வானவன் சடுதி வந்து அக்கன்னி**
**கான் செய்த மலர்ப்பாதத்தைத் கண்டு இறைஞ்சி கடவுள் அருள் கருதும் தன்மை**
**தான் செய்த ஏவல் எனத் தவறாது ஓர் மணத்து அமைதல் தருமம் என்ன**
**தேன் செய்த கனி சொல்லால் சீர்த்த பல உறுதிகளும் செப்பினானே**

*(கான் செய்த–நறுமணத்தைப் பரப்புகின்ற) (சீர்த்த – மேன்மையான)*

வானில் சுடராய் ஒளிரும் சூரியனைப் போல வடிவெடுத்து பூமிக்கு வந்த வான தூதன் தேவதாயினுடைய மலர்ப்பாதங்களைத் தொழுது வணங்கினான். திருத் தூதன் தனக்கு இறைவன் இட்ட பணியை இயம்பி அதை நிறைவேற்ற ''திருமணத்துக்கு இசைவதே கடமை'' எனக்கூறி இன்னும் பல சிறந்த வாக்குறுதிகளையும் செப்பினான்.

'திருமணம்' என்ற வார்த்தையைக் கன்னி மரியாள் கேட்டதும் மனங் கலங்கினாள். அவளது முகம் மாறியது தூதன் கூறிய மணிமொழிகளின் உட்பொருளை உணர்ந்ததுமே அவளது நெஞ்சம் படபடத்தது. மறுமொழி கூறத் திணறியவளாய் கண்களிலிருந்து ஆறு போலக் கண்ணீர் சொரிந்தாள். தூதனின் வார்த்தைகள் ''தேனோ'' என அவளால் விழுங்கவும் முடியவில்லை ''நஞ்சோ'' என அவளால் உமிழவும் முடியவில்லை ''இறைவனே! அருளாளனே! உன் திருவடிகளைப் பணிந்து தொழுது மாயை மிக்க இவ்வுலக வாழ்வில் உழல வைக்கும் திருமண நெறியே இன்றி மூன்று வயதுக்கு முன்பே என்றும் மாறாத கன்னியாக வாழத் தீர்மானித்து வாழ்ந்து வந்தேனே ஐயனே! இன்று என்னை வாளாலே அறுத்தது போன்று திருமணம் பற்றிக் கூறமுற்பட்ட திருவுளம் யாதோ'' என்று புலம்பினாள் புலம்பியழுத கன்னி சற்று அமைதி கொண்டாள் மனித நெஞ்ச எண்ணங்களுக்கு அடங்காதவனும் வல்லமைமிக்கவனுமாகிய இறைவன் திருவுளம்; இவ்வாறு அமையுமெனில் அதற்கு ஏது தடை? இறைவனின் இக் கட்டளையால் தனது கன்னிமைக்கு எவ்வித களங்கமும் ஏற்படாது என்று எண்ணி மலையின் திண்மையையும் வென்ற மன உறுதியோடு திருமணத்திற்கு இணங்கினாள்.

மரியாள் திருமணத்திற்கு 'ஆம்' என்று சம்மதம் தெரிவித்ததும் இறைவன் எருசலேம் ஆலய பிரதம குருவாகிய சீமையோனுக்கு ஓர் செய்தி அனுப்புகின்றார் ''குற்றம் ஏதுமில்லா தாவீதன் குலத்தில் பிறந்தவளும், மாசிலா வரங்களால் மற்றைய மாதர்களில் உயர்ந்தவளும் மரியாள் என்னு பெயர் கொண்டவளுமான ஓர் இளமங்கை தேவாலயத்தில் இருக்கின்றாள். அவளுக்குத் தகுந்த மணவாளனை மணம் முடித்து வைப்பாய்'' என்பதே அச் செய்தியாகும்.

ஆண்டவனின் இவ் ஆணையைக் கேட்ட தவமுனி சீமையோன் [illegible] வரங்களைத் தம்பாற்கொண்ட மரியாளை அழைத்து ஆண்டவன் கூறிய யாவற்றையும் அவளுக்கு உரைத்தார். மேலும் மனித குலத்தை அவள் வழியால் மீட்க ஆண்டவன் திருவுளங் கொண்டுள்ளார் என்பதையும், மேலும் ஒரு வரமாக இறைவன் கொடுக்கும் திருமண வாழ்வையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். மரியாளும் ஆண்டவனின் ஆணை அதுவென்றால் தான் அதை ஏற்பதாக இசைந்தாள்.

திருமணம் பற்றிய தேவசித்தத்தை மரியாள் ஏற்றுக்கொண்டதும் எருசலேம் ஆலயத்தில் வாழ்ந்த தவமுனிவர்கள் அனைவரும் யூதேயா நாடெங்கும் தாவீதின் குலத்தில் மாண்பொடு வாழும் இளைஞர் அனைவரையும் அழைப்போம் என்றனர். ராஜ பேரிகையை முழக்கி நாடெங்கும் மரியாளின் திருமணச் செய்தியைப் பரப்பினர். தாவீதின் கோத்திரத்திற் பிறந்த உறவுமுறையாக அமைந்த இளைஞர் அனைவரும் திருமண ஆசைகொண்டு ஆலயத்துக்கு விரைந்தனர். திருமணமே வேண்டாமென்று அருந்தவம் இயற்றிய சூசையும் தலைமைக் குருவும் தவமுனியுமாகிய சீமையோனின் கட்டளைக்குப் பணிந்து எருசலேம் ஆலயம் சென்றான். திருமணத்திற்காக ஆலயத்திற்கு வந்த இளைஞர் ஒவ்வொருவர் கையிலும் உருகோலினைக் கொடுத்து மரியாளுக்கேற்ற மணாளனைக் காட்டுமாறு அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரையும் இறைவனை மன்றாட வேண்டினார் சீமையோன். என்னே ஆச்சரியம்!

**உள்ளும் பொழுதே இவன் ஓங்கிய கோல்**
**கள்ளும் கடியும் பொழி காமர் இதழ்**
**விள்ளும் செழு வெண்மலர் பூத்தமையால்**
**மள்ளும் விரை ஆலயம் மல்கியதே**

*( விரை–வாசனை, காமர் இதழ் விள்ளும்– அழகிய இதழிகள் விரிந்த)*

ஆலயத்தில் கூடியிருந்த மக்களுடன் சூசை இறைவனை வேண்டிச் சிந்தித்துக் கொண்டிருதவேளை அவன் தன் கரத்தே ஏந்திய கோலிலே தேனையும் சிறந்த வாசைனயும் கொண்ட வெண்ணிற மலர் ஒன்று பூத்தது அது ஆலயம் முழுதும் நறுமண வாசனையைப் பரப்பியது.

சூசையின் கரத்தில் விளங்கிய கோல் மலர்ந்ததைக் கண்ட மக்கள் அனைவரும் சூசையை வாழ்த்தினர். திருமணத்தை தன் நெஞ்சத்திலும் நினையாதிருக்க இப்போது தான் மணம் புரிய வேண்டியுள்ளதேயென உள்ளம் நொந்த சூசைக்கு திருமணத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொள்வதால் நன்மையேதும் இல்லையென்றும், தருமத்தின் கோவிலாக மிளிரும் தெய்வமகள் மரியாளை மனையாளாகப் பெற்றதாலும், அவன் தன் நெஞ்சத்தே விரும்பும் துறவறத்தன்மையை நிலைபெறச் செய்வதே தனது திருவுளம் என்றும் இறைவன் சூசைக்கு ஆறுதல் சொன்னார்.

சூசையின் நிலை இப்படியிருக்க மரியாளும் திருமணத்தின் விளைவாக தனது கன்னிமைக்கு நிழல் கொடுத்த அந்த எருசலேம் தேவாலயத்தை விட்டு நீங்க வேண்டியுள்ளதே என்று கலங்கினாள். திருமணம் செய்தல் வேண்டும் என்ற எண்ணம் கடுகளவும் இல்லாத மரியாளை தேவஅருள் சிறிதும் குறையாத என் அன்பு மகளே என் ஆணைக்கு அடிபணிந்தே சூசை உனக்குத் துணைவனாக வருகின்றான். உன் கன்னிமைக்கு எதுவித பங்கமும் ஏற்படாதவாறு உனைப் பாதுகாப்பான் என இறைவன் மரியாளைத் தேற்றினார். தவமுனி சீமையோன் மண மங்கையாகிய மரியாளின் கரத்தையும், மணவாளனாகிய சூசையின் கரத்தையும் சேர்த்து வைத்து ''உம் இருவர் வழியாக வானுலக வேந்தராகிய மீட்பர் பிறந்தருள்வாராக'' என்று ஆசீர்வதித்து அவர்களது திருமணத்தை நிகழ்த்தி வைத்தார். முரசு முழங்க, மத்தளம் ஒலிக்க, இனிய நாதசுர இசை இசைக்க தர்மத்தின் மக்களே நீவீர் வாழி என மக்கள் வாழ்த்த சூசை மரியாள் திருமணம் இனிது நடைபெற்றது. தம்பதிகள் நசரேத்தூரில் ஓர் சிறிய வீட்டில் வசித்து வந்தனர். இருவரும் அவ்வீட்டில் வசித்து வருங்கால் இறைவன் பங்குனி மாதம் இருபத்தைந்தாம் நாள் கபிரியேல் தேவதூதனை மரியாளிடம் அனுப்பி வைத்து மீட்பரின் அவதாரத்தை அறிவிக்கின்றார்.

கன்னிமைக்குச் சிறிதளவும் களங்கமில்லாப் பெண்ணே! இவ்வுலகில் சங்கு ஆண்துணையின்றியே கருவுற்று முத்தினைப் பெறுகின்றது. இது உலக வழக்குக்கு அப்பாற்பட்ட கருப்பவதியாவாய். பொன்னின் ஒளியிலும் சிறந்து ஒளிவீசும் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாய். அக் குழந்தைக்கு 'யேசு' என்னும் எல்லாப் புகழையும் விஞ்சிய பெயரைச் சூட்டுவாய் என்றார்.

**மதிபழித்து இலங்கு சங்கின் வாய்ந்த சூல் பழித்து ஈங்கு உள்ள**
**விதி பழித்து அரிய ஆற்றால் வேய்ந்தது ஓர் கருப்பம் ஆகி**
**நிதிபழித்து ஒளிர்ந்த தோன்றல் நீ பயந்து அவற்கு இயேசு**
**துதிபழித்து உயர்ந்த நாமம் சொற்றுவாய் கன்னிமாதே**

என்றான் கபிரியேல் தூதன். இதைக் கேட்டதும் மரியாள் ''தொய்யல் உற்று இறைவன் தாளைத் தொழுது வாழ் திருவல்லோனே! மய்யல் அற்று அழிவு இல் கன்னி மைந்தனைப் பெருதல் ஏது?'' எனத் தூதனை வினவினாள். தூதன் மரியாளை நோக்கி ''நீ பெற்றெடுக்கும் குழந்தை கடவுளின் மகன். அழியாத அரசினை நிறுவி ஒப்பற்ற செங்கோலாட்சி செய்வான். அக்குழந்தை இவ்வுலகின் காவலனுமாவான் எத்தகைய மூலமுமின்றி விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்த வல்லமையுள்ள இறைவனுக்கு கன்னித் தன்மை கெடாது உன்னைக் காத்தல் என்பது ஓர் அரிய செயல் என்பாயோ என்று கபிரியேல் தூதன் மரியாளைத் தேற்றினார்.

**கார் உலாம் உலகும் அங்கு கதிர் உலாம் சுடரை எல்லாம்**
**கார் உலாம் உலகும் யாவும் காரணம் ஒன்றும் இன்றிச்**
**சீர் உலாம் வயத்த நாதன் செய்தலின் மகவை ஈன்றும்**
**சீர் உலாம் கன்னி ஆதல் சேர்த்தலே அரிது என்பாயோ**

மரியாளின் தூதனின் தூதுரை கேட்டுத் தன் வழியாக நிகழவிருக்கும் திருவுளத்தை எண்ணி இறைவனைத் தொழுதாள். பத்து மாதங்கள் கழிந்தன, தேவ அருள் நிறைந்து மன மகிழ்வு பொங்க வாழ்ந்து வருங்கால் ஒளியாகிய திருக்குழந்தை வயிற்றிற்குள்ளே அசைவதை உணர்ந்தாள்.

**மாதம் மார்கழி வைகல் ஐயைந்தாய்**
**ஏது இலா நிசிக்கு இருத்தை மூவைந்தாய்**
**ஆதி நாள் என ஆதி நாதனை**
**காதல் நாயகி களிப்பின் நல்கினாள்.**

*(இருத்தை–நாழிகை, ஆதிநாள்–வாரத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை, வைகல்–நாள்)*

மார்கழி மாதம் இருபத்தைந்தாம் நாள் வாரத்தின் முதன் நாளாகிய ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுக்கும் பதினைந்து நாழிகை இருக்கும்போது உலகம் அனைத்திற்கும் ஆதியான நாதனாம் யேசு பாலனை, மண்ணுலக மக்களின் அன்புத் தலைவியாகிய மரியாள் மகிழ்வோடு பெற்றெடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் மாடடைக் குடிலா? மாண்புமிகு மனக் குடிலா?

S. M. வுளோறன்ஸ்

"இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்" என்னும் இறைத்தூதரின் அறிவிப்பு அன்றைய யூத இன மக்களிடையே தாழ்ந்த குலமாக விளங்கிய இடையர்களுக்கு அறிவிக்கப்பட்ட மகிழ்வின் செய்தியாகும். இச் செய்தியைப் பெற்ற இடையர்கள் தகுந்த முறையில் பாருலக மீட்பரைச் சென்று வணங்க வேண்டும் என்பதனை இறைத்தூதர் தக்க சான்றுகளுடன் அடையாளப்படுத்தியதனால் எளியோர் குலம் மீட்பரை இலகுவாக அவரது எளிமைத் தன்மையிலேயே இனங்கண்டு ஆராதிக்க முடிந்தது.

மூன்று மிலேனியங்களுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்வை நாம் இன்றுவரை கொண்டாடி வருகின்றோம் எனில் அதன் பெருமைகளை வர்ணிக்க வார்த்தைகள் எமக்குக் கிடைக்கா! இறைத்தந்தை தமது ஏக குமாரனையே தூதனாக்கி இம் மண்ணுலகில் மனுவுரு தாங்கச் செய்த நிகழ்வை நாம் நத்தார் விழாவாகக் கொண்டாடி வருகின்றோம். இம் மாபெரும் நிகழ்வு இடம்பெற்றது ஓர் மாடடைக் குடில்தனில் என்பதை வரலாறு எமக்குச் சுட்டி நிற்கின்றது. இஃது எமக்கு எதனை உணர்த்துகின்றதெனில் இறைவன் மனிதனின் உடலையோ உடல் அலங்காரங்களையோ விரும்புகிறவர் அல்ல; மாறாக எளிமைத் தன்மையும் பரிசுத்தமும் நிறைந்த உள்ளங்களையே விரும்புகிறார்.

அன்றைய மாடடைக் குடிலும் அதன் வெளிப்புறச் சூழலும் எமக்குப் பல அசிங்கங்களையும், அசுத்தம் நிறைந்த தன்மைகளையும் ஏற்படுத்தி நிற்கின்றன. இம்மாடடைக்குடில் உலகரட்சகர் இயேசுவிற்கு யாரால் கொடுக்கப்பட்டது? இதே உலக மக்களால்தான்! ஏனெனில் அன்றைய மக்கள் கன்னிமரியிடம் பிறக்க இருப்பது உலக இரட்சகர் தான் என்பதை அறியாதிருந்தனர். ஆனால் மரியாளிடம் விளங்கிய இறை திட்டத்தை ஏற்கும் தாழ்மையும், சூசையிடம் விளங்கிய அனைத்தையும் மன உறுதியோடு ஏற்கும் பொறுப்புணர்வும் அது மாடடைத் தொழுவம் என்றாலும் மன மகிழ்வுடன் திருப்தி காண வைத்தது. அதனால் அங்குள்ள அசிங்கங்கள் மறைந்து பரிசுத்தவானின் வரவினால் புதுப்பொலிவு கொண்ட புனித இடமாகியது. மேலும் இறைத்தூதர்கள் புகழ்பாட, எளிமை உள்ளம் கொண்ட இடையர்கள் வருகை தர, தெய்வீக ஞானமும் ஆத்மீக தேடலும் கொண்ட அரசர்கள் ஆராதிக்க, அசௌகரியங்கள் அகன்று அவ்விடம் முழுவதும் அமைதி தங்கியது. மாடடைக் குடிலின் வடிவிலும் இறைவன் தேடியது, இத்தகைய மாண்புள்ள மனித உள்ளங்களையே என்பதனால் தான் அவர்களுக்குத் தமது தரிசனத்தை வெளிப்படுத்தினார். ஆனால் ஆதிக்கம் கொண்டோர் ஆணவம் கொண்டோர் ஆட்சி வெறிபிடித்தோர், அநீதிகள் இழைப்போர் அவரை அங்கு தேடிவந்த போது தமது தரிசனத்தை வெளிப்படுத்தவில்லை இஃது ஏன் என்று சிந்திப்போமா? பின்னையோரின் நிலைகொண்ட நெஞ்சங்களே அசிங்கத்தையும், அருவெறுப்பை யும் துர்நாற்றத்தையும் வெளிக்கொணரும் மாட டைக் குடிலாகும். அதனால் அவர் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தவில்லை.

அனைத்துலகையும் ஆளும் வியத்தகு ஆலோசனையாளரான அம் மன்னன் தேடியதோ அமைதி குடிகொள்ளும் அன்பு உள்ளங்களை, நீதியை எடுத்துரைக்கும் நேர்மைமிகு நெஞ்சங்களை; பகிர்ந்துவாழும் பண்புள்ள மனங்களை பாதகச் செயலற்ற பாலக உள்ளங்களை, சமத்துவ மனங்கொண்ட சமாதான உள்ளங்களை, வாடி நிற்போருக்கு வாழ்வளிக்கும் மனங்களை, மனித நேயத்தை மதிக்கும் மாண்புள்ள இதயங்களை, இத்தகைய மனித நிலைகளை உருவாக்கவே எளிமையின் வேடம் பூண்டான் மாடடைக் குடில்தனில்.

ஆனால் அவ் உண்மை அர்த்தம் புரியாமலும் புரிந்தும் வாழ்வை மாற்றாமலும் இற்றைக்கு மூன்று மிலேனியங்களைக் கடந்துவிட்ட காலத்திலும் மாடடைக்குடில் போன்ற அசிங்கத் தன்மையிலேயே ஊறி வாழ்வதன் நோக்கம் தான் என்ன? விஞ்ஞானம் மாறியபோதும் எம் உள்ஞான மனங்கள் இன்னும் மாற்றமடையாது மீட்பரைத் தேடும் விந்தைதான் என்ன? அவற்றிற்கும் காரணம் இல்லாமல் இல்லை எமது அநீத செயல்கள் ஏற்றுக்கொள்ளாத் தன்மைகள் சுயநலப்போக்குகள்; பட்டம் பதவிகளைக் கைக்கொண்டுவிட வேண்டும் என்ற தணியாத ஆவல்கள், வரட்டுத் தனமான தன்னிலை இறங்காத் தன்மைகள், ஏழையரை அடக்கி ஆளும் தன்மைகள், உலகியல் மோகங்கள் மொத்தத்தில் இறைவார்த்தைக்கும் ஆன்மீகத்திற்கும் முதலிடம் கொடுக்காத மூடத்தனங்கள் என்பவையே அடிப்படைக் காரணங்கள் ஆகின்றன. இத்தகைய மனித மனங்களே அசிங்கம் நிறைந்த மாடடைக் குடிலாகின்றது. இந்நிலை மாற வேண்டும். நாம் எதிர்கொள்ளும் நத்தார் விழாவில் மனித மனங்கள் யாவும் மாசற்றவன் உறையும் மாண்புமிகு மனக்குடில்களாக மாறவேண்டுமெனில் எம் சிந்தனை, சொல், செயல் என்பவற்றில் தூய்மையையும், வாய்மையையும் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் நாமும் இறைமாட்சியை கண்டடைந்து உள்ளத்து நிறைவை அளிக்கும் அமைதியில் வாழமுடியும். ஆகவே இனியும் மாடடைக்குடில் அல்ல மாண்பும் மனித நேயமும் கொண்ட உள்ளங்களே மெசியா பிறக்கும் இல்லங்களாகட்டும்.

# அஞ்சாதீர்கள்! இதோ மகிழ்ச்சியூட்டும் செய்தி

ஆ. சான்பெனற்
(இளவாலை)
வவுனிக்குளம்

மகிழ்ச்சி என்பது உள்ளத்திலிருந்து வெளிப்படும் ஒரு நிலையாகும். மனிதன் அதனை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்துகின்றான். தனது சொல்லிலும், செயலிலும் வெளிப்படுத்தினாலும் உதட்டளவில் மகிழ்ச்சி இருக்கிறது என்று கூறமுடியாது மனம் வேதனைப்பட்டாலும் உதடு மகிழ்வை வெளிப்படுத்துவது சாதாரண விடயம்.

அன்று மந்தைகளை எதிரிகளிடமிருந்து பாதுகாத்து இரவும் பகலும் விழித்திருந்து தீனிபோடும் இடையர் கூட்டத்தினர் மனமகிழ்வு இல்லாது வாழ்ந்தனர். நாடோடிகளான அவர்கள் இதுதான் எமது வாழ்க்கையா என்று விரக்தியின் எல்லையில் நின்று சிந்தித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தினர்க்கு வானதூதர் தோன்றி அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூக் 2:10).

இவ் அறிவிப்பைக் கேட்டதும் அவர்களின் கண்கள் அதிசயித்தன யார் இவர்கள்? அகுஸ்து சீசரின் கையாட்களோ என்ன சொல்லப் போகின்றார்கள்? எங்கட இந்தக் கஷ்டமான வாழ்விலே மகிழ்ச்சியூட்டும் செய்தியாம் என்று அங்கலாயித்துக் கொண்டிருந்த வேளை

**"இன்று ஆண்டவராகிய மெசியா என்னும்
மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே
பிறந்திருக்கிறார்" (லூக் 2:11)**

என்று வானதூதர்கள் கூறியபோது மகிழ்ச்சி வெள்ளத்திலே துள்ளிக் குதித்து எழுந்தார்கள். மனதினில் இருந்த வேதனைகள் களைந்து புதுப்பொலிவுடன் ஆண்டவரைக் காண அவர்கள் காலடிகள் நகர்ந்தன. துன்பங்கள் மத்தியில் வாழ்ந்த இடையர் மகிழ்ச்சி ததும்ப ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இன்றும் எங்களுக்கு இச் செய்தியை ஆண்டவர் அறிவிக்கின்றார். எம் வாழ்விலே எத்தனையோ கஷ்டங்கள், துன்பங்கள் வருகின்றன. பல வருடங்களாக இருப்பிடம் இல்லாது அலைகின்றோம். ஒரு வயிற்றுக் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் தவிக்கும் குடும்பங்கள் எத்தனை. பெற்றோரை இழந்து சகோதரர்களை இழந்து தவிக்கும் உள்ளங்கள் எத்தனை. இத்தனை துன்பங்களின் மத்தியில் மகிழ்ச்சியின் செய்தி என்று சொல்கின்றார்களே ஏற்றுக்கொள்ளலாமா? என்று சிந்திக்கும் தமிழ் மக்களுக்கான செய்தி என்ன?

சமாதானத்திற்கான இறுதிக் கட்ட பேச்சுக்கள் நடக்கின்றன என்ற நோர்வேயின் செய்தி மகிழ்ச்சியைத் தருகின்றதா! அல்லது ஆட்சி மாற்றத்தினால் அமைதி உண்டாகும் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றதா!

அன்றைய இடையர்களைப் போல் இன்று நாம் அலைகின்றோம். போர் நிற்குமா, சமாதானம் நிலைபெறுமா? அமைதியுடன் வாழ்வோமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்போது ஆண்டவர் இன்று எம்மைப் பார்த்துக் கூறுகிறார் *"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது"* (எசா. 9:2)

ஆம் துன்பப்படும் மக்கள் கிறிஸ்துவின் ஒளியைக் காண்கின்றார்கள். சாவு ஆட்கொண்டிருக்கும் எமது நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொருவர் மேலும் கிறிஸ்து எனும் ஒளி உதித்துள்ளது. அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் துள்ளிக் குதித்து ஆலயம் செல்கின்றார்கள். அங்கே ஆண்டவராகிய மெசியாவைக் காண்பதற்காக அலையலையாக மக்கள் கூட்டம் சந்திக்கும் உறவினர்களுடன் கண்ணீர் மல்க மகிழ்ச்சியை பகிர்கிறோம் நண்பர்களுக்கு கை கொடுத்து வாழ்த்துகின்றோம் குழந்தைகளைத் தூக்கி முத்தமிடுகின்றோம்.

துன்பங்களில் மூழ்கியிருந்த எமக்கு கிறிஸ்துவின் பிறப்பு புதுப்பொலிவூட்டி மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்த வைக்கின்றது என்ற மன நிறைவோடு "கிறிஸ்மஸ்" பண்டிகையை கொண்டாடி மகிழ்வோம்.

# ஏழ்மையின் உருவிலே...

தவம் குருசுமுத்து
நவாலி

ஏளியோர்க்கு நற்செய்தி அறிவிக்க ஏழ்மையின் உருவிலே அவதரித்தார் இயேசுபிரான். இன்று நேற்றல்ல இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுக்கு முன்பதாக இறைமகன் இயேசு மானிடர் பாவம் போக்க மாநிலம் தன்னிலே மாதவனாகத் தோன்றினார்.

மாட மாளிகைகள். கோடி கோபுரங்கள் மத்தியிலே மிடுக்கும் தன்னலமும் நிறைந்த உலக வாழ் மன்னனாக அவர் தோன்றவில்லை. மாறாக ஏழ்மை உருவிலே எளிய கோலத்திலே மாடடைக் குடிலிலே, பாவியர்க்கு மீட்பளிக்க வந்த தேவனாம் அவர் இயேசுபிரான் வந்துதித்தார்.

ஆதியிலே அண்டசராசரங்கள் அனைத்தையும் சிருஷ்டித்த பரலோக தந்தையின் அன்பு மகனார் இவ்வுலகில் அவதரித்தபோது இந்த இழிவான கோலம் கொண்டதேன்?

பாவிகள் தம் பாவநிலையில் இருந்து விடுபட்டு உன்னதராம் இறைவனை அடைவதற்காக தம் நிலையை விடுத்து பூலோகம் வந்து அனைத்து மாந்தரின் தவறுகளுக்காக தம் உடல் பொர்ருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துக்கொண்டார்.

இத்தகைய நிகழ்வுகள் எம்மவர்க்கெல்லாம் எடுத்துக்கூறும் செய்திகள் என்ன? நத்தார் காலங்களிளெல்லாம் எமக்கு மகிழ்வான நாட்கள்தான். ஆயினும் இந் நாட்களில் நாம் செய்து வரும் செயல்களை நோக்குவோமானால் ஆடை அணிகள் உல்லாசப் போக்குகள், களியாட்டங்கள், இடாம்பீகத் தன்மைகள் போன்ற வெளிச் செயற்பாடுகளில் எம்மை ஈடுபடுத்தி, நாம் செய்ய வேண்டிய காத்திரமான கடமைகளில் நின்று தவறி விடுகின்றோம்.

ஏழைத் தச்சனின் மகனாக இருந்த இயேசு பிரானின் ஏழ்மை உருவினை ஒரு கணம் சிந்திப்போம். ஏழை மக்கள் நல்வாழ்வு பெற தம்மையே அவர்களுக்காக அர்ப்பணம் செய்தார். என் நாம் அவர் வழி தொடரக் கூடாது? எம்மைச் சுற்றியுள்ள எத்தனையோ இல்லாதவர், இயலாதவர்களை இனம் கண்டு [illegible] உதவிகளைப் புரிய முன்வருவோமானால், நாம் சந்திக்கும் நத்தார் விழாவை அர்த்தத்துடன் கொண்டாடுவோம்.

## மாண்புடனே தருவீரே!

மூதாதையர்கள்
முன்னாளில் செய்த
பாவத்தைப் போக்கிடவே
பாலகனாய்ப் பிறந்தவரே
எம்மவரின் வாழ்வுதனை
எந்நாளும் காப்பீரே

அகிலத்தை மீட்டிடவே
அமலனாய் வந்தவரே
இவ்வுலக மக்களையே
இன்பமாய் வாழவைத்து
மகிமையான வாழ்வுதனை
மாண்புடனே தருவீரே

சி. நிசாந்
தரம் – 10
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் தினத்தையொட்டி வெளிவரும் கட்டுரை

# மனித உரிமைகளும் திருச்சபையும்



அருள்திரு கி.ஜோ. ஜெயக்குமார்

இருபதாம் நூற்றாண்டின் தனித்துவமெதெனில் உலகின் மூலை முடுக்கெல்லாம் மனித உரிமைகள் பற்றி குரல் எழுப்பப்பட்டுக் கொண்டிருப்பதேயாகும். மனித உரிமைகள் பற்றிய பிரக்ஞை வளர்ந்து கொண்டிருப்பதேயாகும். மனித உரிமைகள் குழுக்கள், மனித உரிமை ஆணைக்குழுக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எனப் பல மனித உரிமைகளைக் காக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இது ஒரு புறமிருக்க மறுபுறத்தில் மனித உரிமைகள் மீறல்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதும் நோக்கற்பாலாகும். குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் மனித உரிமை மீறல்கள் சமய தீவிரவாதம், இன, மொழித் தீவிரவாதம், அகதிவாழ்வு என பல வடிவங்களில் தோன்றி மனித குலத்தின் மாண்பினை சிதைப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படி ஒரு புறம் மனித உரிமைக்கான பிரக்ஞை மறுபுறம் மனித உரிமை மீறல்கள் இவை எமக்கு உலகின் முரண்பாட்டு இருப்பியலை தெளிவாக காட்டி நிற்கின்றது.

## 1. மனித உரிமையின் வரலாறும் அதன் தோற்றுவாயும் (Sources)

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்பு (1948–12–10) மனித உரிமைகள் மறுக்கப்பட்டு பல்வேறு விளிம்பு நிலையிலுள்ளோரின் நலன்களைப் பேணுவதற்காக தோற்றுவிக்கப்பட்டதே மனித உரிமைகள் பிரகடனம். இதன் சிறப்பு யாதெனில் ஐ.நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளால் எதிர்ப்பு வாங்குகள் என்று தானின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதேயாகும். அகில உலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கொடுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் பின்வருமாறு நிரைப்படுத்தலாம்.

1) உயிர் வாழும் உரிமை 2) சமத்துவ உரிமை 3) உணவுபெறும் உரிமை 4) சுதந்திரமாக வாழும் உரிமை 5) உடல் நலம் பேண உரிமை 6) சித்திரவதைக்கு உட்படுத்தாத உரிமை 7) சமய உரிமை 8) பாதுகாப்புடன் வாழ உரிமை 9) கருத்தை சுதந்திரமாக வெளிப்படுத்த உரிமை 10) ஆண் பெண் சம ஊதியம் பெற உரிமை

இரண்டாம் மகா யுத்தத்திற்கு முன்பு ஏதேனும் மனித உரிமைகள் உலக அரங்கில் நிலை நிறுத்தப்படவில்லையா என்ற கேள்வி எழுவதற்கு வாய்ப்புண்டு. ஜனநாயகத்தின் தொட்டில் என வர்ணிக்கப்டும் பெரிய பிரித்தானியாவில் மனித உரிமைகட்கான தோற்றுவாய் வித்திடப்பட்டுள்ளது என்று கூறலாம்.

தனி மனித உரிமைகட்கு முன்னைய வரலாறுகளில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லையென்றாலும், தனிமனித உரிமைகள் அரச தலையீட்டிற்கு அப்பாற்பட்டவை அல்ல என்ற அடிப்படையில் தான் 1188ல் ஐபீரிய தீபகற்பற்று லியான் அரசின் கோட்டஸ் (Cortes) அவைக்கு அரசர் ஒன்பதாம் அல்யோன்சோ வழங்கியதாக அறியப்படும் உரிமைகள் பழமை பெறுகின்றன. ''இம்மென்றால்'' சிறைவாசம் ''ஏனென்றால்'' தலையறுப்பு என்ற சூழல் இருந்து வந்த அந்தக்காலத்தில், குற்றசாட்ப்பட்டவருக்கு முறையான விசாரணை பெற உரிமை, தனிமனித உயிருக்கு, தகுதிக்கு, வீட்டிற்கு, சொத்துக்கு பாதுகாப்புரிமை என்பவற்றை மன்னர் அல்போன்கோ வழங்கினார் என்று அறியும் போது உரிமை வரலாற்றின் ஆரம்பம் தெளிவாகின்றது.

மனித உரிமைகள் வரலாற்றின் இன்னுமோர் முக்கியமான நிகழ்வு 1215ல் ரன்னிமீட் (Runny mede) தீவில் (இங்கிலாந்து) நிகழ்ந்தது. அதற்கு முன்னர் இங்கிலாந்தின் முதலாம் கென்றி மன்னர் முதலாம் உரிமைகள் சாசனம் என்று அறியப்படும் உரிமைகள் சாசனம் ஒன்றை வழங்க நேர்ந்ததும் வரலாற்று செய்தியாகும். 1215ல் கொடுங்கோல் மன்னர் ஜான் பணிய நேர்ந்த தேம்சு நதி தீரத்து ரன்னி மீட் தீவில் தான் மனித உரிமைகளின் புதிய வரலாறு தொடங்கியது. இதன் மூலகர்த்தா காண்டபரி தலைமைக் குரு ஸ்ரீபன் லாங்கிஸ்டேன் ஆவார். 63 உட்பிரிவுகளைக் கொண்ட ''மாக்னா காட்டா'' என்னும் உரிமைகள் மகா சாசனத்தில் மன்னர் ஜான் முத்திரையிட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இத்தீவில் தான் எதிர்க்கும் உரிமை (Rights of resistance) அம் மகா சாசனத்திலிருந்தே பெறப்பட்டது.

உரிமை வரலாற்றின் அடுத்த கட்டம் இங்கிலாந்தில் இரண்டாம் ஜேம்ஸ் மன்னரது கொடுங்கோன்மைக்கு எதிராக அளிக்கப்பட்ட உரிமைகள் மனு (Petition of Rights 1628) அதன் பின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உரிமைகள் மசோதா (Bills of Rights 1689) ஆகியவை குறிப்பிடலாம். சட்டத்தின் மேலாண்மை (Supremacy of Law) நிலைாடட்டப்பட இம் மசோதா அடித்தளம் அமைத்தது என்பது இதன் சிறப்பம்சமாகும்.

தொடர்ந்து அமெரிக்க விடுதலைப் பிரகடனம்(1776) வர்ஜீனிய பிரகடனம் பிரான்சில் அறிவிக்கப்பட்ட உரிமைகள் பிரகடனம் (Rights of man of citizens) 1789 ஆகியவை மனித உரிமைகளின் வரலாறும் தோற்றுவாயுமாகும்.

## 2. மனித உரிமைகள் விடயமாக திருச் சபையின் நிலைப்பாடு

கிறிஸ்தவத்தின் வேதநூலான விவிலியத்தில் மனித உரிமைகள் பற்றி பொதுவாகப் பேசியதில்லை. மாறாக தமக்குள் கொண்டுள்ள கடமைகளை பெரிதும் வலியுறுத்துகின்றது. எனினும் மனித உரிமைகளை எடுத்துரைக்கும் பாடங்களை விவிலியத்தின் ஒரிரு பகுதிகளில் இங்கு குறிப்பிடப்படலாம்.

1) படைப்பை விளக்கும் பகுதிகள் தொ.நூல் 1/1–2, 4 , 2/4–25

2) கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரிடையே நிலவ வேண்டிய அடிப்படைச் சமத்துவம் க/லா 3/28

இவற்றிலிருந்து நாம் அடைய வேண்டிய பாடம் எல்லா மாந்தரும் சமம், அவர்கள் எல்லோருக்கும் மனித மாண்பு உண்டு. இவற்றின் மீது எழுப்பப்பட்டதே ஐ.நாடுகள் வெளியிட்டுள்ள மனித உரிமைகள் பிரகடனம்.

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கைத்தொழில் புரட்சியின் விளைவாக பிரபுத்துவ சமூக அடுக்கமைவிலிருந்து சமூகம் முதலாளித்துவ அமைப்பிற்கு மாற்றம் அடைந்தபோது தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட முறையை அன்றைய பாப்பிறை 13ஆம் சிங்கராயர் தொழிலாளர்களின் நிலை அடிமைத் தனத்தைவிட சற்று உயர்ந்தது என வாணித்துள்ளார். இத்தகைய சூழமைவில் தான் திருச்சபை நிறுவன ரீதியாக மனித உரிமைகளை வலியுறுத்தி தொழிலாளர் சாசனம் என்னும் திருமடலை முதல் முறையாக வெளியிட்டது. திருச்சபையின் சமூக, மனித உரிமைகட்கான ஈடுபாடு சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்து சிறப்பான வளர்ச்சி பெற்றுள்து. இதிலிருந்து முழு மனித விடுதலையை முன்வைத்து பேசுமளவிற்கு திருச்சபை வளர்ந்துள்ளது. நீதிக்கான ஒவ்வொரு போராட்டமும் மனித உரிமைக்கான போராட்டமாகத் தானிருக்க முடியும் என்ற நிலைக்கு திருச்சபை வந்துள்ளது.

வத்திக்கான சங்க முதலமர்வோடு (1963) 23ஆம் பாப்பிறையால் வெளியிடப்பட்ட அவனியில் அமைதி என்ற சமூக சுற்றுமடலில் மனித உரிமைகட்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது குறிப்பிடப்படவேண்டியது. இம்மடலில் மனிதனுக்கு யாரும் மறுக்க முடியாத சில உரிமைகளை பாப்பிறை வலியுறுத்துகின்றார். ஆனால் அதேசமயம் அவற்றுடன் கூடிய கடமைகளையும் வலியுறுத்துகின்றது. பல உரிமைகளை பேசும் இம்மடல் பொதுநலனில் (Common good) பின்ன ணியிலேயே அவற்றைப் பற்றிப் பேசுகின்றது அடிப்படை உரிமைகளை மதிக்காத ஓர் அரசு மக்களை ஆழ்வதற்கான தனது உரிமையை இழந்து விடுவதாக (இல62) இம் மடல் சுட்டிக் காட்டுகின்றது.

தொடர்ந்து வந்த வத்திகான் சங்க ஏடுகள் மனித உரிமைகட்கான இறையியல் அடிப்படையை விளக்குகின்றது. அத்துடன் மனித உரிமைகட்கான கருத்தியல் அடிப்படையையும் வளங்குகின்றது. சமுதாய அமைப்புக்கள் நிறுவனங்கள் எதுவாகவிருந்தாலும் அவற்றின் மையம் என்ற அடிப்படை அறநெறி அழுத்தம் கொடுக்கப்படுவதை சங்க ஏடுகளில் அவதானிக்கலாம் எல்லா மனிதருக்கும் ஒரே தொடக்கம் இருப்பதனால் அனைவரும் சமம் என்பது மட்டுமல்லாது அனைவரும் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு தூய ஆவியால் அர்ச்சிக்கப்பட்டவர்களாகையால் அனைவரும் சமமே என்ற இறையியல் அடிப்படையும் வழங்கப்பட்டுள்ளது (இல29).

1971இல் உலக ஆயர் மன்றம் வெளியட்ட ''உலகில் நீதி'' என்னும் அறிக்கை மனித உரிமைகள் நீதிக்காக உழைப்பது நற்செய்தி அறிவிப்பாகும் (இல6) என்ற புரட்சிகர அழைப்பை விடுவித்திருக்கின்றது. இக் கருத்தானது திருச்சபை மனித உரிமைகள் மட்டில் காட்டும் அக்கறையை ஆர்வத்தை தெளிவுபடுத்துகின்றது. மேலும் மக்களின் சமூக அடிப்படை உரிமைகளை மறுக்கின்ற சமூக அமைப்புக்கள் நீக்கப்படவேண்டும் என்ற (இல 16) வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம்.

இரண்டாம் அருள் சின்னப்பர் தமது சமூக ஈடுபாடு நூறாவது ஆண்டிலே என்னும் சுற்றுமடல்களில் சமுதாய முன்னேற்றம் என்பது தனி மனித சமுதாய உரிமைகளை மதிப்பதில் வெளியிடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

மனித உரிமைகள் விடயமாக திருச்சபையின் படிப்பினைகளிலே காணப்படும் தனித்துவம் யாதெனில் தனி மனித உரிமைகட்கு முக்கியத்துவம் கொடுக்காது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகட்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவது நோக்கத்தக்கது.

இன்றைய நூற்றாண்டில் திருச்சபையின் மனித உரிமைகட்கான பணி அவற் றின் போதனைகளில் விரவிக்கிடப்பதை தெளிவாக காணலாம்.

இறுதியாக மனித உரிமைகளைப் பேணுவதற்கான களங்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. மனித உரிமைகள் பற்றிய பிரக்ஞை மக்கள் மத்தியில் பெருகிக்கொண்டே வருகின்றது. இருப்பினும் மனித உரிமைகள் பற்றிய சட்டங்களால் எதவும் பெரிதாக சாதித்துவிட முடியாது. மனித உரிமைகட்கான மக்கள் இயக்கம் தோன்றி அவற்றின் செயற்பாடுகள் கூர்மையடையும் போதுதான் மனித உரிமைகளை யாவரும் அடைந்திட வழியமைக்கலாம்.

# கனவின் ஒளியில் சமாதானம் பெற்ற சூசை

நாவாயூர் பாலா
கனடா

ஏழைத் தச்சுத் தொழிலாளியான சூசை 13 வயதாயிருக்கையில் யூத மத போதகருடன் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, தகாத செயலில் ஈடுபட்டிருந்த ஒரு பெண்ணைக் கையும் மெய்யுமாகப் பிடித்து, அக்காலச் சட்டத்தின் பிரகாரம் கல்லால் எறிந்து கொல்லுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்தாள். ஒரு வியாபாரியான பென்ஜமின், சூசையும் போதகருமிருந்த ஜன்னலண்டை வந்து, தகாத செயலில் ஈடுபட்ட பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்வதற்கு வருமாறு அழைத்தான். இவர்கள் அவ்விடம் போகையில், சூசை தான் முதல் முறையாக ஒரு முழு மனிதனாகக் கணிக்கப்பட்டு அழைத்ததைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு சென்றார்.

கூட்டத்தின் நடுவில் நிறுத்தப்பட்டிருந்த பெண் சிறியவளாகவும், தனக்கு ஏற்படப்போகும் அவலநிலை பற்றியும் எண்ணிக் கொண்டிருந்தாள். அவள்மீது எல்லோரும் கற்களை வீசத் தொடங்கினர். சூசை இதனை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். சூசையின் உற்ற நண்பர் ஐசாக் அப்பெண் மீது எறிவதற்கு சூசையிடம் ஒரு கல்லைக் கொடுத்தார். சூசை அக்கல்லை வைத்துக் கொண்டிருந்தாரே தவிர எறியவில்லை. பின்பு பென்ஜமின் சூசையிடம், உனக்கு என்ன நடந்தது? இது யூதச் சட்டம், இச்சட்டத்தை நிறைவேற்றுவது ஒவ்வொரு யூதரினதும் கடமையாகும். இதிலிருந்து விடுபடுவதற்கு யோசிக்கிறீரா? எனக்கேட்டார்.

சூசை தனது போதகருடன் உரையாடும்பொழுது யூத அநீதிச் சட்டங்களை நிறைவேற்றுவது பிழையான செயலென வாதிட்டமையை மனதில் நினைந்து தம் கையிலிருந்த கல்லைக் கீழே போட்டுவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார். இவ்விதம் செல்கையில் தாம் செய்தது சரியா? இறைவன் இதுபற்றி என்னை எவ்விதம் நினைப்பார்? எனச் சிந்தித்தார்.

ஆனால் இன்று அவர் அதுபற்றிச் சிந்திக்வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஆம் அவருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட மேரி கர்ப்பவதியாயிருக்கிறார். அவர் அவளது கணவராக வேண்டியவர்? இது எங்ஙனம் நடைபெற்றதென விசாரிப்பது அவர் கடமை. அவளிடம் கேட்க முனைந்தபொழுது அவளது பால்வடியும் முகம் அவளிடம் அக்கேள்வியைக் கேட்கும் துணிவை அளிக்கவில்லை. அக்கேள்வி அவள் கல்லெறிபட்டு சாவதற்கு வழிவகுக்கும். அன்றேல் அவளை இரகசியமாகக் கைவிட்டாலும் இதேநிலைதான் நடைபெறும் என்னும் சிந்தனையோடு இரவு முழவதும் பலத்த சிந்தனையோடு துயருற்ற நிலையிலிருந்து இறுதியாக இறைவனண்டை சரணடைந்தார்.

சூசை தூக்கமடையாதிருந்தாலும் அவரது உள்ளம் ஒளியினால் பிரகாசமாகி கனவு காண்பதாக உணர்ந்தார். தாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை, மேரியைத் தாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவள் நீதியான வாழ்வு வாழ்பவர். மேரி தூய ஆவியின் கொடையினால் கர்ப்பவதியாகியுள்ளாள். அவள் மூலம் உலகிற்கு மீட்பர் கிடைக்கவுள்ளார். இம் மீட்பர் மூலம் உலகு பெரும் நன்மைகளைப் பெறவிருக்கிறது. இதற்குத் தாம் தடையாக இருக்கக்கூடாதென உணர்ந்து மேரியைத் தம் மனைவியாக ஏற்று உலகிற்கு நல்வாழ்வை அளிக்கத் தீர்மானித்துச் சமாதானமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்புமுனையில் திருச்சபை "ஒளிமயமான எதிர்காலம்"

க. அடைக்கலம்
புனித வளனார் அ.ம.தி
குருமடம்
யாழ்ப்பாணம்

திருச்சபை இன்று ஒரு திருப்புமுனையில் வாழ்கின்றது. இறைமக்களின் வாழ்வு பல்வேறு பிரச்சினைகளால் அமுக்கப்படும் இக் காலகட்டத்தில் பொதுநிலையினர் வெறும் பார்வையாளர்களாக இருந்த நிலை மாறுவதற்கான அறிகுறிகள் ஆங்காங்கே தென்படுகின்றன உதாரணமாக ''யாழ் மறைமாவட்டத்தில் நடந்தேறிய மாபெரும் குணமாக்கல் வழிபாடு'' இதற்கு சாலப் பொருத்தமானதாகும்.

ஆயரின் அனுமதியுடன் நடந்தேறினாலும் முழுக்க முழுக்க இது குரு நிலையினர் பொதுநிலையினர் இவர்களின் கூட்டு முயற்சியே ஆகும். யாழ். திருச்சபையானது தற்போதைய அமைப்புக்களினாலும் அனுகுமுறைகளினாலும் பொதுநிலையினருக்கு அவர்களின் எதிர்கால விசுவாச அணுகுமுறைக்கு பெறும் பேறானதாகும். இவை அனைத்தும் ஆவியானவரின் ஏவுதலன்றி வேறு என்ன? வழிபாட்டுச் சடங்குகளும் வாழ்வுப் பிரச்சினைகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற உயிர்த்துடிப்பு பொதுநிலையினரிடம் வேண்டும் என்று இன்று ஒலிக்க ஆரம்பித்துள்ளது.

செல்லரித்துப் போன பழமைக்கும் செப்பனிடப்பட வேண்டிய புதுமைக்கும் இடையே இன்று போராட்டம் வழுத்து வருகின்றது. புரட்சிக் கனல் தெறிக்கும் பருவக்காலம் இது பேயின் ஆட்சிக்காலம் என்று ஆரூடம் கூறும் பழமைவாதிகளிடம் இருந்து ஆவியின் இந்த அருள்நிறை மூவாயிரம் ஆண்டு வருகை காப்பாற்றப்பட வேண்டும் இறையரசின் உண்மைப் பணியாளர்களாய்த் திருச்சபை செயற்பட தன்னை எப்போதும் புதுபிக்க வேண்டும். காலத்தின் தேவைகளும் மக்களின் மாறிவரும் சூழலின் தன்மைக்கும் ஏற்ப தன் வாழ்வையும், பணியையும் யேசுவின் நற்செய்தியின் அடிப்படையில் மறு ஆய்வு செய்து மாற்றிக்கொள்வது அவசியமானதாகும்.

திருச்சபை தனது அணுகுமுறைகளையும், செயற்திட்டங்களையும், முதன்மைகளையும் இன்றைய சூழ்நிலைக்கேற்ப புதுப்பித்துக் கொள்வது இன்றியமையாதது. இவ்வாறு பொதுநிலையினரே குரல் கொடுக்கின்றனர்.

யாழ். திருச்சபையை பொருத்தவரையில் வளமான திருப்புமுனையில் திடமாக காலடி எடுத்து வைக்கின்றது. இதைவிட வேறு சாட்சியம் தேவையில்லை. ஒளிமயமான எதிர்காலம் திருச்சபையின் பயணப் பாதையில் சுடர்விடத் தொடங்குகின்றது எனவே நவீன யுகத்தில் இருக்கும் நாம் எம்மை இறையுகத்திலும் புதுபிக்க வளர்க்க துணிவோம், முயல்வோம்,வாழ்வோம்.


## இறைதியான இல்ல குணமாக்கல் வழிபாட்டு நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் சில















## என் சித்தம் அல்ல உம் சித்தம் நாதா என்னாலே அல்ல உம்மாலே ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழாவும் தொடர்பான அடையாளங்களும்

## – ஓர் வரலாற்று அறிமுகம் –



### கிறிஸ்து பிறப்பு விழாவின் ஆரம்பம்

கிறிஸ்துவின் பிறந்த நாளைக் கொண்டாடும் விழாவை கிறிஸ்து பிறப்ப விழா என்று அழைக்கின்றோம். உரோமர்கள், கிரேக்கர்கள் தமது அரசர்களிற்கும், அறிஞர்களிற்கும் பிறந்த நாள் கொண்டாடுவது மரபு. இதற்குச் சான்றாகத் தான் ''ஏரோதின் பிறந்த நாளில் ஏரோதியாளின் மகள் அவையினர் நடுவில் நடனம் ஆடி ஏரோதை அகமகிழச் செய்தாள்'' என மத்தேயு 14:6 கூறுகின்றது. இப் பிறப்ப விழாக்களில் ஒன்றுதான் சூரிய பகவானின் பிறப்பு விழாக் கொண்டாட்டமும் ஆகும்.

உரோமையர்கள் டிசம்பர் 25ம் *நாள் வெற்றி கொள்ள முடியாத சூரிய பகவானின் பிறப்ப விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். உரோமையை ஆட்சி செய்து வந்த அவுரேலியன் தான் போரில் வெற்றி கொண்டதன் நினைவாக கி.பி 274 டிசம்பர் 25ம் நாள் தனது நாட்டிற்கு சூரியக் கடவுளைத் தலைமைப் பாதுகாவலராக அறிக்கையிட்டான். அச் சூரியக் கடவுளிற்கு ஓர் ஆலயத்தையும் கட்டி விழா எடுத்தான். அன்றைய நாளை விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தினான்.*

இவ்விழாவைக் கிறிஸ்தவம் எவ்வாறு உள்வாங்கியது என்றால் கிறிஸ்தவர்களிற்கு முக்கியமானவர் கிறிஸ்து. எனவே கிறிஸ்தவர்கள் தமது இருள் சூழ்ந்த உள்ளத்திற்கு ஒளியாகவும் உலகின் அடிமைத்தனத்திற்கு விடிவிளக்காகவும் வந்துதித்த கிறிஸ்துவிற்கு இதே தினத்தில் விழா எடுக்க ஆரம்பித்தனர். கிட்டத்தட்ட 336ம் ஆண்டில் இருந்து டிசம்பர் 25ம் நாளை உரோமைக் கிறிஸ்தவர் கிறிஸ்துவின் பிறப்பு விழாவாகக் கொண்டாட ஆரம்பித்தனர். இவ்வாறு உரோமையில் ஆரம்பிக்கப்பட்ட இப் பெருவிழா 4ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிக்குள் கீழை நாடுகளிற்கும் பரவியது இன்று உல கெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் டிசம்பர் 25ம் நாளைக் கிறிஸ்து பிறந்த நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.

*வைலற் நீக்கிலாஸ்*
*உதவி விரிவுரையாளர்*
*(தற்காலிகம்)*
*யாழ். பல்கலைக்கழகம்*

புனித பொன்வாய் அருளப்பர் கிறிஸ்து உண்மையாகவே டிசம்பர் 25ம் நாள்தான் பிறந்தார் என்று வாதாடுகின்றார். அதற்கு அவரது விளக்கம் பின்வருமாறு அமைகின்றது. சக்கரியாஸ் ஆலயத்தில் பணி செய்து கொண்டிருந்த நாள் பாவப் பரிகார நாள் **(Day of Atonement)** செப்டம்பர் 24. அன்றுதான் கோடைகால சூரியனின் விழாவும் கொண்டாடப்பட்டது. செப்படம்பர் 24ல் யோவான் கருவாகி ஜுன் 24ல் பிறந்தார். யோவான் பிறந்த நாளிலிருந்து 6 மாதங்கள் பின்னோக்கிப் பார்த்தால் டிசம்பர் 25. ஏனெனில் மரியாளுக்குத் தூதர் வாழ்த்துக் கூறி சம்மதம் கேட்டபோது எலிசபெத்திற்கு 6ம் மாதம் (லூாக்1:36). இக் கணக்கை இன்று பலரும் ஏற்றுக்கொள்வதில்லை.

### கிறிஸ்மஸ் குடில்

''விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்கள்'' (லூாக் 2:7). பெத்தலகேமில் கிறிஸ்து பிறந்ததாகக் கருதப்படும் இடத்தில் இயேசுவின் பிறப்பாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதிலுள்ள இயேசு பிறந்ததாகக் கூறப்படும் குகையின் தரையில் இயேசு பிறந்தார் என்பதைச் சித்தரிக்க வெள்ளி நட்சத்திரம் ஒள்று வரையப்பட்டிருந்தது. அங்கு இயேசுவைக் கிடத்திய தீவனத் தொட்டி ஒன்றும் காணப்பட்டது. கி.பி. 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித ஏரொணிமுஸ் பெத்தலகேமிற்குச் சென்று அந்தக் குகையில் இருந்த புனிதப் பொருட்களை உரோமிற்குக் கொண்டு வந்தார். திருத்தந்தை 3ம் செக்ஸ்துஸ் 5ம் நூற்றாண்டில் உரோமிலுள்ள புனித மேரி மேஜர் பேராலயத்தைப் புதுப்பித்து அங்கு ஒரு குகையை அமைத்தார். பெத்தலகேமிலிருந்து கொண்டுவரப்பட்ட அந்தப் புனிதப் பொருட்களை அக் குகையில் வைத்து வணக்கம் செலுத்தி வந்தார். 7ம் நூற்றாண்டிலிருந்து திருத்தந்தையர் அங்கு கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற்றி வந்தனர்.

ஆனால் முதன் முதலில் புனித பிரான்சிஸ் அசிசி 1223ல் இத்தாலியிலுள்ள கிறசியோ **(Gressio)** எனும் ஊரில் குடில் ஒன்று அமைத்து மெழுகினால் குழந்தை இயேசுவின் சுரூபம் செய்து உண்மையான மனிதர்களை மரியாளாகவும் சூசையாகவும் நடிக்கச் செய்து கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடினார் என்று வரலாறு கூறுகின்றது. இவற்றிலிருந்து பிற்பட்ட காலங்களில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி போன்ற மேலை நாடுகளில் குடில் பக்தி பரவியது. 16ம் 18ம் நூற்றாண்டுகளில் மக்கள் பங்குக் கோவில்களில் மட்டுமல்லாது தமது இல்லங்களிலும் குடில் செய்து குடும்ப செபங்களைச் சொல்லத் தொடங்கினர். இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு மேலைநாடுகளில் இருந்து மறைபரப்ப வந்த குருக்கள் இப் பழக்கத்தைக் கொண்டு வந்தனர்.

### கிறிஸ்மஸ் மரம் (X 'Mas Tree)

கிறிஸ்மஸ் மரம் கிறிஸ்தவர்களால் தோற்றுவிக்கப்பட்டதே ஆகும். முதன் முதலாக 1605ம் ஆண்டு ஜேர்மனியிலுள்ள ஸ்டிராஸ்பேர்க் எனுமிடத்தில் நடந்த கிறிஸ்மஸ் கொண் டாட்டத்தின் போது இம் மரம் இடம்பெற்றது.

இக் கிறிஸ்மஸ் மரமானது இரு மறை அடையாளங்களை நினைவூட்டுகின்றது.

*1. சிங்கார வனத்தின் நடுவில் அமைந்த மரம்*
*2. கிறிஸ்துவின் ஒளி*

முற்காலத்தில் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு நடைபெற்ற சிங்கார வன நாடகத்தின் போது மேடையின் மேல் அப்பிள் பழங்களுடன் அலங்கரிக்கப்பட்ட மரத்தை அமைத்தனர். அங்கு அவர்கள் ஆதாம், ஏவாளையும் நினைக்கத் தவறவில்லை.

பெத்தலகேமில் சுடர்விட்ட உலகின் ஒளியாம் இயேசுவின் அடையாளமாக மெழுகுவர்த்திகளையும் மரத்தின் உச்சியில் விண்மீன்களையும் தொங்கவிட்டனர். மனுக்குலத்தைப் பாவத்திற்கு இட்டுச் சென்ற மரத்தின் சின்னமாக இல்லாமல் மீட்பின் கனிதரும் மரமாக கிறிஸ்மஸ் மரம் இன்று எமக்குக் காட்சி தருகின்றது.

### கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் காலம் அண்மித்ததும் எமக்கு முன் மகிழ்ச்சியூட்டும் உருவகமாக இருப்பவர் தான் இந்தக் கிறிஸ்மஸ் தாத்தா. மத்திய ஆசியாவிலுள்ள ''மீரா'' என்ற நகரத்திற்கு ஆயராக இருந்தவர் நிக்கொலஸ் ஆவார். இவர் ஏழை எளியவர்களுடனும் இளைஞர்களுடனும் அன்பும் இரக்கமும் கொண்டு அவர்களுக்கு உதவி செய்வார். குறிப்பாகக் குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் பரிசில்கள் வழங்கி மகிழ்விப்பார். ஆயருடைய இத்தகைய பணியினால் இவர் இறந்த பின்பு பல ஆலயங்கள் இவர் பெயரில் தோற்றம் பெற்றன.

பல நாடுகளிற்கும் சென்ற டச்சு மாலுமிகள் ஆயரின் இறைபணியைப் பலருக்கு அறிவித்து அவரது திருநாளான டிசம்பர் 6ல் சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர். அப்போது சிறுவர்கள் செய்த கற்பனைப் படைப்புத்தான் வெண்தாடியுடன் வரும் புனித நிக்கொலஸ் இவர் சிறுவர்களுக்கு கூடை நிறையப் பரிசில்கள் கொண்டுவந்து வழங்குவார்.

கிறிஸ்மஸ் பிறப்பு விழாவில் முக்கிய இடம்பெறும் கிறிஸ்மஸ் தாத்தா குழந்தை இயேசு அளிக்கும் அளவற்ற அன்புப் பரிசின் அடையாளமாகத் திகழ்கின்றார். நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்ய வேண்டும் என்பதை நினைவூட்டவே இக் கிறிஸ்மஸ் தாத்தா.

### நிறைவுரை

ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் விழாவை நாம் ஒவ்வொருவரும் கொண்டாடுகின்றோம். புத்தாடைகள் அணிதல் இல்லங்களை அழகுபடுத்தல் குடில்கள் அமைத்து கிறிஸ்மஸ் மரம் அலங்கரித்தல் பரிசுப் பொருட்களைப் பரிமாறுதல் போன்றவை இவ்விழாவை நாம் மெருகூட்டமேற்கொள்ளும் செயற்பாடுகளாக அமைகின்றன. இவை மட்டும் இக்காலகட்டத்தில் இவ் விழாவைப் பூரணப்படுத்தும் என்று கூறிவிட முடியாது. மாறாக எமது மண்ணில் மக்கள் சிந்தும் அழுகைக் குரல்களின் பின்னணியில் அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட நாம் பணிக்கப்படுகின்றோம்.

**துணை நின்ற நூல்கள்**

1. தியாகு, விவிலியக் களஞ்சியம், பாகம்2 மதுரை, 1992.
2. செபஸ்தியான் சூ, திருவழிபாடு, திருச்சிராப்பள்ளி, ஆண்டு குறிப்பிடப்படவில்லை.
3. செல்வராஜ் எக்ஸ் டி., புத்துலகம் படைக்கவே, பவுல் இறையியல் மன்ற வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி, 1991.
4. தமிழ் நேசன், ''இறைமகனை ஈன்றெடுத்த மறை பொருள் மரியா'', இறையியல் கோலங்கள், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம், மார்கழி 1998, பக் 23–29.

# இயேசு எங்கே பிறக்க வேண்டும்?

இற்றைக்கு கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன் யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்னும் ஊரிலே, இறைவாக்கினர் எசாயா முன்னுரைத்தவாறு ''இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார், அக்குழந்தைக்கு இம்மானுவேல் என பெயரிடுவர்'' (எசா 7:14) பிறந்தார். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல அனைத்து உலகமுமே அவரின் பிறப்பு விழாவைக் கொண்டாடி வருகிறது. ஏனென்றால் அவர் இன்றும் எங்களோடு வாழ்கின்றார் என்பதால்தான். சாதாரணமாக எம்முடைய பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் என்போரின் பிறப்பு விழா, அவர்கள் இவ்வுலகில் வாழும்போதுதான் கொண்டாடுகிறோம். இறந்தவுடன் பிறப்பு நாள் எமக்கு நினைவு வருவதில்லை. அதைக் கொண்டாடுவதுமில்லை. ஆனால் கிறிஸ்து மனுவுரு எடுத்தவர், பாடுபட்டு இறந்தார், ஆனால், மூன்றாம் நாள் உயிர் பெற்றெழுந்தார். உயிர்த்த கிறிஸ்து எம்மோடு இப்போ வாழ்வதனால்தான் நாம் அவருக்கு பிறப்பு வாழ்த்துக் கூறுகின்றோம். எனவே இப் பிறப்பு விழா கொண்டாடுவது தகுதியும் அர்த்தமுள்ளதாகவும் உள்ளது.

ஏ.ஜே.ஏ. ஜெயரஞ்சன்
யாழ்ப்பாணம்

ஆனால் புனித அருளப்பர் நற்செய்தியில் நாம் படிப்பது போன்று (அரு.1:1) தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ் வாக்கு கடவுளோடு இருந்தது. அவ் வாக்கு கடவுளாயும் இருந்தது (அரு1:4). ''அவரிடம் வாழ்வு இருந்தது. அவ் வாழ்வு மனிதருக்கு ஏணியாய் இருந்தது'' (அரு1:14). ''வாக்கு மனிதர் ஆனார்'' வார்த்தையே அன்னை மரியாளினுடைய வயிற்றில் கருவாக வளர்ந்தது. ஆதியிலே ஒரு வார்த்தையால் உலகைப் படைத்த கடவுள் ஒளி தோன்றுக என்று ஒளியையும், வானம் தோன்றுக என்று வான் வெளியையும் படைத்தார். அதேபோல் தம் இறைத்திட்டம் வானதூதர் கபிரியேல் வழியாக வார்த்தையை அறிவித்து கருவை உதயமாக்கினார். இதனை முதலில் மரியாளிடம் அனுமதி பெற்ற பின்புதான் தம் திட்டத்தை நிறைவேற்றுகின்றார். இது மனித வல்லமையினாலே முடியுமா? என எண்ணிப் பார்ப்போம்.

போர் மேகம் சூழ்ந்து, சொந்த உறவுகளை பிரிந்து இடப்பெயர்வுகள், பொருளாதார சிக்கல்கள், உடைமை அழிப்புக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற எம் வாழ்விலே இன்று நாம் கிறிஸ்துவுக்கு **Happy Birthday** சொல்லி வாழ்த்துகிறோம். ஆனால் இன்று இக்கிறிஸ்து எங்கே பிறக்கப்போகின்றார்? அரசியல் வாதிகள் கூடிக் கதைக்கின்ற மேசையிலா? எங்கள் ஆலயங்களில் உள்ள மாட்டுத் தொழுவத்திலா? எங்கள் வீடுகளில் நாங்கள் உருவாக்குகின்ற கொட்டில்களிலா? நாங்கள் தொழில் செய்யும் அலுவலகங்களிலா? நாங்கள் பயிலுகின்ற பாடசாலைகளிலா? என சிந்திப்போம்.

இல்லை! முதலில் எம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் பிறக்க, பாவ இருள் படிந்துள்ள இதயத்திலே ஒளியை ஏற்ற எங்களையே நாங்கள் தயாரிப்போம். இறைத்தந்தை இன்று எம் ஒவ்வொருவரிடமும் அனுமதி கேட்கின்றார். அதாவது உன் உள்ளத்தில் என் வார்த்தை பிறக்க இடம் தருவாயா? எனவே உங்கள் உள்ளம் தயாரா? இருள் கொண்ட எம் வாழ்விலே அணையாத ஒளியாம் இயேசு ஒளியேற்ற அனுமதி கேட்கிறார்? நீ தயாரா? தயாராயின் பிறக்கும் பாலனுக்கு வானதூதரோடு சேர்ந்து நாமும் பிறந்த நாள் வாழ்த் துப் பாடுவோம்.

''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி
உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு
அமைதி உண்டாகுக!

மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக உங்கள் உள்ளத்திலே பிறந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்து பிறப்பு விழா வரலாறு

இ.ம. ஜெயசீலன்
மறையாசிரியர்

வாழு முன் வரலாறு படைத்த இறைவன் வையகத்தில் மனிதனாகப் பிறந்ததை நாம் கிறிஸ்மஸ் விழாவென்று மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றோம். கடவுளின் உறவில் ஒன்றித்திருந்த ஆதிப் பெற்றோர் ஆணவச் செருக்கினால் உன்னத நிலையை இழந்தனர். அமைதியற்று அலைந்தனர். இறைவனின் அருமையை உணர்ந்தனர். அப்போது, இறைவன் ''உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிக்காலைக் காயப்படுத்துவ'' (தொ.நூ. 3:15) என்று மீட்பரைப் பற்றிய வாக்குறுதியை அளித்தார். உலகோரை மீட்கும் காலம் கனியத் தொடங்கியது. ''காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்துக்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்'' (கலா. 4:4–5) மரியாளின் வயிற்றில் வார்த்தை கருவாகி உருவாகியது. மரியாவுக்கு பேறுகாலம் வந்தது, அவர் தம் மகனைப் பெற்றெடுத்தார்.... பிள்ளையை துணிகளில் பொதிந்து தொட்டிலில் கிடத்தினாள் (லூக். 2:6–7).

தொடக்ககாலத் திருச்சபை தனது ஒரே ஒரு விழாவாக கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவை மட்டும் கொண்டாடி வந்தது. ஆதிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். ஏறக்குறைய நான்காம் நூற்றாண்டில்தான் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட ஆரம்பித்தனர். நற்செய்தியாளர்கள் கிறிஸ்து பிறப்பு நாளையோ சரியான ஆண்டையோ கொடுக்கவில்லை. ''அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார்'' (லூக். 2:1) இக் கூற்றுகளின்படி நற்செய்தியாளர்கள் பிறப்பு வரலாறு கொடுப்பது போல தோன்றினாலும் அவற்றிலிருந்து எதையும் அறுதியிட்டுக் கூறக் குறிப்புக்கள் இல்லை. ஆனால், கிறிஸ்துவின் பிறப்பை அடித்தளமாகக் கொண்டு கிறிஸ்துவுக்கு முன் கிறிஸ்துவுக்குப் பின் என்று பிரிக்கிறோம். அறிஞர்கள் கூற்றுப்படி இக் கணக்கும் பிழையானது. கிறிஸ்து கி.மு. 8–4ம் இடைப்பட்ட ஆண்டில் பிறந்திருப்பார் என்று தோன்றுகின்றது. அப்படியென்றால், டிசம்பர் 25ஆம் திகதி கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடுவது ஏன்?

கிறிஸ்மஸ் பெருவிழா ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூறுவதற்காக அல்ல பிற மதத்தினர் கொண்டாடி வந்த திருவிழாவிற்கு இணையாகவும் அதற்கு மாறாகவும் கொண்டாட ஆரம்பிக்கப்பட்ட விழா கிறிஸ்து பிறப்பு விழா.

உரோமைப் பேரரசில் புற மதத்தினர் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர். அதற்கு விழா எடுத்தனர். கொதிக்கும் கதிரவன் பனியைப் போக்கி குளிரை விரட்டிவிடுவதை உணர்ந்த உரோமையர்கள் சூரியனுக்கு டிசம்பர் 25ஆம் திகதி விழா எடுத்தனர். வெல்ல முடியாத சூரியனின் பிறப்பு விழா என இதனை அழைத்தனர். இக்காலத்தில் ஆட்சி செய்த அவூரேலியன் பால்மீயூரா மன்னனை வெற்றிகொண்டதன் நினைவாக கி.பி. 274 டிசம்பர் 25இல் தனது நாட்டிற்கு சூரியனைத் தலைமைப் பாதுகாவலராக அறிக்கையிட்டு ஓர் ஆலயத்தை கட்டினான். அந்த நாட்டு மக்கள் அக் கடவுளை வழிபட விடுமுறையும் நல்கினான்.

இவ்வேளை வளர்ந்துவரும் திருச்சபைக்கு இது ஒரு பெரும் சோதனை. இவ் விழா கிறிஸ்தவர்களையும் கவர்ந்தது. அதேவேளை ''நானே உலகின் ஒளி'' என்ற கிறிஸ்துவை அவர்கள் மறந்து விடவில்லை. ஆனால், கிறிஸ்தவர்கள் அப் பிறப்புவிழா கொண்டாட்டத்தை கைவிட மனம் வரவுமில்லை. இச் சூழலில்தான் ''கிறிஸ்மஸ்'' பெருவிழா ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ போதகர்கள், கிறிஸ்தவர்களும் பிறமதத்தவரும் சூரியக் கடவுள் மீது வைத்த பக்தியை திசைதிருப்ப ''கிறிஸ்து உலகின் ஒளி'' (யோவா 8:12) அவர் ''நீதியின் அரசர்'' என்றும் போதித்து வந்தனர். உரோமையர்கள் கிரேக்கர்கள் தங்களது அரசருக்கு ஆளுநர்களுக்கும் பிறந்தநாள் கொண்டாடுவது மரபு. ஏரோதின் பிறந்த விழாவை மத்தேயு தனது நற்செய்தியில் குறிப்பிடுகிறார். (மத். 14:6) எனவே கிறிஸ்தவர்கள் இம் மரபை பின்பற்றி கிறிஸ்துவின் பிறப்பு விழாவை கொண்டாடினர். படைப்புப் பொருளான சூரியனை வணங்கும் மக்கள் மத்தியில் அதைப் படைத்த இறைவனுக்கு விழா எடுப்பது முற்றிலும் பொருத்தமானது.

நீதியின் ஆதவனாகிய யேசுக் கிறிஸ்துவின் மனிதப் பிறப்பு விழா டிசம்பர் 25ஆம் திகதி கொண்டாடி வந்ததாக 354ஆம் ஆண்டு வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். 336இல் தயாரிக்கப்பட்ட வேத சாட்சிகளின் பட்டியலின் துவக்கத்தில் டிசம்பர் 25இல் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டதாக இருக்கிறது. எனவே இவ் விழா 336ஆம் ஆண்டுக்கு முன் கொண்டாடத் தொடங்கியிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

கீழைநாட்டவர் குறிப்பாக எகிப்தியர் சூரியனை வழிபட்டு வந்தனர். காலப் போக்கில் கிரேக்க மொழி பேசுவோர் சூரியக் கடவுளுக்கு ஜனவரி 6ஆம் திகதி பிறந்தநாளைக் கொண்டாடினர். அன்று இரவு ஏயோன் என்ற கடவுளின் பிறந்த நாளை நினைத்து பெரிய ஊர்வலங்கள் நடத்தினர். கிரேக்கப் பண்பாட்டில் வளர்ந்த கிறிஸ்தவர்களும் அதேநாளில் வார்த்தையான கடவுள் மனிதனாகப் பிறந்த தினத்தைக் கொண்டாடினர். ''வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார்'' (யோவா 1:14). கீழைநாட்டவர் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இவ் விழாவை கொண்டாடினர் என அலெக்சாந்திரியா கிளமெந்து கூறுகிறார்.

காலப்போக்கில் திருச்சபை ஏழாம் நூற்றாண்டில் கிறிஸ்து பிறப்பு விழாவை டிசம்பர் 25ஆம் திகதியும் திருக்காட்சி விழாவை ஜனவரி 6ஆம் திகதியும் கொண்டாட வரையறுத்தது.

கிறிஸ்து வரலாற்றில் பிறந்தார். அவரது பிறப்பு எமக்கெல்லாம் மகிழ்ச்சிச் செய்தியாகும். இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்து கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். மற்றவர்களுக்கும் அறிவித்தனர். எனவே, நாம் பெற்ற கிறிஸ்துவை எமக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவிப்போம்.

# கேள்வியும் உனக்குள்ளே! பதிலும் உனக்குள்ளே!!

ம. பிரான்சிஸ்க்
வெற்றிலைக்கேணி

தொடரும் போரினால் தொடர்பற்று நிற்கும் மனித உறவுகளை வாழ்த்து மடல்கள் சுமந்து செல்லும் மாண்புமிகு நேரமிது. வசந்தங்களின் வாலிபங்களை வரவழைத்துக் கொண்டு வரலாற்றில் ஒரு வள்ளல் தேவன் வந்து பிறக்கும் காலமிது. மனித உறவுகளின் பாலமாக விளங்கும் இந்த மகிழ்வின் நாளிலும் மனவேதனையோடு இந்த மண்ணில் வாழும் ஆயிரக்கணக்கான உள்ளங்களின் அழுகுரல்கள் அகிலமெங்கும் ஒலிக்கத்தான் செய்கின்றன.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

அன்றாடம் அலைகடலுக்குச் சென்று அள்ளி வந்து, அகம் மகிழ்ந்து இன்று ஆக்கிரமிப்பாளர்களின் அடக்குமுறைக்கு அடங்கித் தினம் கடலை மட்டும் பார்த்து நிற்கும் கரையோரவாசியின் கவலை சொரியும் கேள்வி இது.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

காமவெறியின் கணப்பொழுது இன்பத்திற்காகக் கற்பினை இழந்து கருவினைக் கலைத்துக் கடவுளின் கட்டளையை மீறிக் கன்மபாவம் செய்து மனச்சாட்சி இன்று குத்த மனம் குழம்பும் ஒரு பெண்ணின் புலம்பல் இது,

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

வாழ்வின் வெம்மைக்குள்ளும், சமூகத்தின் சாக்கடைக்குள்ளும், கவர்ச்சியைக் காசாக்கும் சினிமாவிற்குள்ளும், மதுவின் மாயைக்குள்ளும், அரசியல்வாதிகளின் ஆசை வார்த்தைக்குள்ளும் அகப்பட்டு இன்று அழிந்து உருவம் தெரியாத உலகில் உலாவும் ஓர் இளைஞனின் அங்கலாய்ப்பு இது.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

பசிக்கொடுமையால் கதறும் பிள்ளைகளின் அழுகுரலாலும், இடம்பெயர்வின் இடர்களாலும், மாரிமழையினால் வாட்டும் குளிராலும், வாடி வதங்கித் தினம் கண்ணீரையே உணவாக்கும் ஒரு தாயின் அவலக் குரல் இது,

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

எங்கட மரத்திற்குக் கீழே கூட இருக்க வேண்டாம் சீச்சீ என்ன சாதியோ? உங்கட ஆட்களோட போங்கோ, என்று சாதியின் பெயரால் சகோதரனைத் தாங்க தஞ்சம் புகுந்து தலை சாய்க்க இடமுமில்லாமல் அலையும் ஒரு மனிதனின் சோக கீதமிது

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

ஐயோ வந்திட்டான் போடப்போறான் எல்லாரும் படுங்கோ? தினம் போரையே சுவைத்து வானில் வட்டமிடும் விமானங்களின் குண்டு வீச்சை எண்ணி ஏற்கனவே பெற்றோரை, உடன்பிறப்புக்களை இழந்து அலையும் ஒரு அனாதையின் அழுகுரல் இது.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

மதுவிற்குள் தன்னை இழந்து கசிப்பைக் கணக்கின்றியருந்தி கடைசிக் கணப் பொழுதில் கட்டிலில் படுத்திருக்கும் ஒரு குடிகாரனின் குமுறல் இது.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

நீதியற்ற நீதிபதியின் தீர்ப்புக்குள்ளாகி நித்தம் பல நிட்டூழியங்களைச் சிறைக்குள் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு நிரபராதியின் குரலொலி இது,

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

பில்லிசூனியத்தால் பிளவுபட்டு கட்சிமனப்பான்மையால் பொறாமையுற்று பிரிவினை பகைமையில் சீற்றமுற்று அழுக்காறு குடிவெறி களியாட்டம் கடைசியில் வேலிச் சண்டை சச்சரவு வரை சென்று வாள் வெட்டிற்று வலது காலை இழந்து தவிக்கும் ஒரு சாதாரண மனிதனின் நாடல் இது.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

அன்பு காட்டி அரவணைத்து ஆதரிக்க உற்றார் உறவினர் யாருமில்லாமல், முதியோர் இல்லத்தில் வாழும் (வாடும்) ஒரு மூதாட்டியின் முனகல் இது,

அப்பப்பா இன்று வாழும் அப்பாவி மக்களின் எண்ணமுடியாத இழப்புக்களையும், சொல்ல முடியாத சோகங்களையும் ஆற்றமுடியாத வடுக்களையும் அளக்கமுடியாத அழுகுரல்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இங்கு நின்று அன்று வாழ்ந்த இஸ்ராயேல் மக்களின் வாழ்வைப் புரட்டிப் பார்த்தால் அவர்கள் வாழ்விலும் இதே அவலங்கள் எழுந்துள்ளதை அவதானிக்க முடியும்.

அரசர்களின் ஆக்கிரமிப்பால் பிள்ளைகளைப் பறிகொடுத்துப் பரிதவித்த பெற்றோரின் ஓலங்களும், உறவுகளைப் பிரிந்து தவிக்கும் உடன்பிறப்புக்களின் அழுகுரல்களும், போரால் இடம்பெயர்வுகளும், நாடு கடத்தலும், பசிபட்டினியும், வனாந்தரப் பயணங்களும் வாட்டி வதைத்தன. சாதிச் சண்டைகளும், துவேஷ வாடைகளும், இனக் குரோதங்களும் இஸ்ராயேல் மக்களின் இனிய வாழ்வை இடித்து நொருக்கின. அப்போதுதான் சமாதானத்தின் அவசியத்தை உணர்ந்தார்கள். அமைதியைத் தேடி அலைந்தார்கள். எமக்கு மீட்பில்லையா? விடிவில்லையா? சமாதானம் இல்லையா? ஒளிமயமான வாழ்வு இல்லையா? எனக் கதறிக் கதறிக் கடவுளிடத்தில் பல ஓலங்களை எழுப்பினர்.

கதறி அழும் மக்களுக்குக் கனிந்த வாழ்வு கொடுக்க விண்ணில் இருந்த கடவுள் இடம்பெயர்ந்து மண்ணிற்கு வந்தார். அரச மாளிகையில் அல்ல ஆநிரைத் தொழுவில் அன்னை மரியின் மைந்தனாக, அகிலத்திற்கு ஆண்டவனாக நிம்மதியான வாழ்வு வழங்க வந்து பிறந்தார் யேசுபிரான். பிறந்த யேசுவை நிம்மதியாக வாழ விட்டார்களா? நசரேயனாக அகதியாக்கினர், தச்சனின் மகன் தானே எனச் சாதியினால் தாக்கப்பட்டார். அநியாயத் தீர்விற்கு உள்ளானார். தலைசாய்க்க இடமுமில்லாமல் எல்லோராலும் கைவிடப்பட்டார். இருந்தும் தனது இலக்கை இழந்து விடவில்லை புரட்சிப் பாதையில் அல்ல பூலோகத்தின் தானே முதல் அமைதியின் தூதுவனாக மாறினார். சமாதானத்தின் மன்னனாக மாறினார். ஒளியின் சுடராக மாறினார். அன்பின் வேந்தனாக மாறினார்.

அன்புச் சகோதரமே ''எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?'' என்று ஏன் இன்று நீ கேள்வி எழுப்புகின்றாய்? நீ உன்னையே ஒரு கணம் எண்ணிப்பார். உனக்குள் சென்று நீ சமாதானத்திற்கு என்ன செய்தாய்? என்று முதலில் உன்னையே கேட்டுப் பார்? அப்போது உனக்குப் புரியும் நீ கடவுளின் ஆலயமாகிய உனது உள்ளத்தை ஊனியல்பின் செயல்களான பரத்தமை, கெட்டநடத்தை, காமவெறி, சிலை வழிபாடு, பில்லிசூனியம், பகைமை, சண்டைசச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டத்துடன் சாதிசண்டை, வரட்டுக் கௌரவம், இறங்காப் பிடிவாதம் என்பவற்றால் நிரப்பி அலகையின் குகையாக்கி வைத்துள்ளாய் என்பதைக் கண்டு கொள்வாய்

அன்புச் சகோதரமே, மனித நேயம் இன்னும் மடிந்து போகவில்லை. உதவும் உயர் குணம் இன்னும் உடைந்து போகவில்லை. இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவில் மதம் பிடிக்காத மனிதர் கூட்டம், துவேஷமில்லாத தூயவர்கள், இனக்குரோதமில்லாத இனிய இதயங்கள் இந்த இலங்கையில் இருந்து எழுவார்கள்.

**எனக்கு ஏன் இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா?**

என்று நீ எழுப்பிய கேள்விக்க நீயே விடையைக் கண்டு அகமகிழ்வாய் அன்புக் கலாச்சாரத்தில் ஓர் அகிலத்தையே நீ உன் கண்ணாலே காண்பாய் அப்போது இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா உன்னில் அழியாத ஒரு மகிழ்வின் முத்திரையைப் பதிக்க மன நிறைவுடன் மன்னவனின் பிறப்பைக் கொண்டாடுவாய் இது நிச்சயம் சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர் மன்னவனே என்னைச் சமாதானத்தின் கருவியாக மாற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மானுவேல் வெற்றி தருவார்!

இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண்
ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள் அக்குழந்தைக்கு
அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள்
எசாயா இறைவாக்குரைத்தார்
வலிமைமிகு இறைவா என்றுமுள தந்தையே
நீர் மானிடக் குழந்தையாகப் பிறந்த ஈராயிரத்தோராவது பிறந்ததின மீதிலே
தாழ் பணிந்து பிறந்தநாள் வாழ்த்துக் கூறுகின்றேன்
பெத்தலகேமில் நீர் பிறந்ததைக் கூறினால் முன்பு நம்ப மறுத்த பலர்
தொலைக்காட்சிகளில் நீர் பிறக்கப் பாக்கியம் பெற்ற
புகழ் மிகு பெத்தலகேமை உற்று நோக்குகின்றனரே
மந்தை மேய்த்த இஸ்ராயேல் மக்களைத் தேவ இனமாகத்
தெரிந்தெடுத்து எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்து
இஸ்ராயேல் வம்சத்தில் உதித்து அவர்களின் அரசனானீரே
சமாதானத்தின் வேந்தனே உங்களுக்குச் சமாதானம் என
பல தடவைகள் கூறியதை உமது புனித நூல் கூறுகிறதே
நானே உலகின் ஒளி என்று பாவ இருளை அகற்றியவரே
உலக மீட்புக்காக பல்லாயிரம் மக்கள் ஏங்கித் தவித்த
நகர சர்ப்பத்தை வென்ற உண்மையாம் ஒளியின்
உமது பிறப்பின் ஆயத்தங்கள் தெரிகின்றதே
உமது பிரதிநிதியாம் எம்பாப்பு 2ம் அருள் சின்னப்பர்
ஆயுதங்களைக் களையுங்கள் என உலக நாடுகளிடம்
வேண்டுகோள் விடுத்தும் இரத்த ஆறு ஓடப்பண்ணுகின்றனரே
ஈராயிரமாம் (யூபிலி) உமது பிறந்ததின நள்ளிரவு தொடங்கி
மாதங்கள் நான்கு போராளிகள் சமாதானத்துக்கினங்கினரே
எம்மண்ணின் சமாதானம் தட்டிக்கழிக்கப்படுகின்றதே ஐயா
உம் மகிமைமிகு பிறப்புதிருநாளிலே அரசு நீதியை ஏற்க
நாட்டுமக்கள் அமைதியில் வாழ உம் திருக்கரத்தால் ஆசிவழங்குவீராக
வெற்றிதருவார் இம்மானுவேல் (கடவுள் நம்மோடு)

M. செபஸ்தியாம்பிள்ளை

# குடிலிற் பிறந்த கோமகனே வாராய்!

மரிமடி தனிலே மழலையாய் உதித்தாய்
மன்னவன் இயேசு ஏழ்மையைச் சுமந்தாய்
மாடடைத் தொழுவம் தேடியே அலைந்தாய்
மாண்புடன் பிறந்து மகிமையைக் காண்பாய்

மந்தைகள் மேய்க்கும் இடையர்கள் சூழ
மன்னவன் மூவர் வணங்கவே தேட
மகிழ்வுடன் வானவர் கீதமே முழங்க
மயக்கிடும் குளிரில் தவழ்ந்தாயோ பாலா.

அன்று நீர் அகதி ஆகினீர் குடிலில்
இன்று நாம் அகதியாய் அலைகிறோம் நாளும்
இன்றுடன் நேற்றுடன் என்றுமே முடியா
இடுக்கண்கள் சுமந்து வாழ்கிறோம் தேவா

உரிமைகள் இழந்தோம் உறவுகள் பிரிந்தோம்
உண்டிட உறங்கிட வழியின்றித் தவித்தோம்
மானத்தை மறைக்க வழியின்றி அலைந்தோம்
மாற்றானின் வீட்டிற் புகலிடம் கேட்டோம்

தெருத் தெருவாக அகதியாய் அலைந்தோம்
தெரு வழிதனிலே உடன்பிறப் பிழந்தோம்
தெருவெல்லாம் செந்நீர் வழிந்திடும் கோரம்
தெருவினிற் பெற்றவர் மறைந்திடத் தவித்தோம்

அமைதியின் தேவா எப்போது நீங்கும்
அவனியில் நாட்டில் எப்போது ஓயும்
அமைதியின் நாதா விடிவொன்று தாராய்
அன்பனே தேவா எழுந்திங்கு வாராய்

போரினால் வாடி சோர்ந்திடும் எம்மை
போருக்கு அடிமையாகிடும் நாட்டை
பேருவகையுடனே அமைதியை நாட
பேரின்பம் அளிக்கும் அமலனே தாராய்

மேரி இம்மாகுலேற் இராஜகுமார்

# அமைதி அருள வாராயோ?

பாவத்தினால் பாழாய்ப் போயிருந்த
பாரினை மீட்க வந்தவரே
மண்ணில் எம் மக்கள் படும்
துயர்களைத் தீர்க்க வாராயோ?

அடிமையின் தன்மை பூண்டு
ஏழ்மையின் மடியில் உதித்தவரே
அழுமுகம் காணும் எம் இனத்தோரை
அரவணைத்து ஆறுதல் கூற வாராயோ?

அன்பு வழிகாட்ட பிறந்த
அகதிகளின் ஆதரவே!
அடக்குமுறைகள் அகன்றிட
அமைதி அருள வாராயோ?

பூவை கன்னிமரிமைந்தா
நீதியை நிலைநாட்டிட
அநீதியை அழித்திட – எம்மை
அரவணைத்திட வாராயோ

ஜெ. பானுஜா
தரம் - 4A
நல்லூர் சென். பெனடிற் றோ.க.த. பாடசாலை

# பாலகனே வருக!

இலங்கையில் இனப்பிரச்சினை இன்றி
இகமதில் இனிய சமாதானம் மலர
இறைமகனே வருக!

அகதிகளாய் அலையும் அவல வாழ்வு அகற்றி
அவனியில் அமைதி வாழ்வு மிளிர
அமலனே வருக!

பாவ இருளில் பாவியர் நம்மை மீட்டு
பாரினில் புத்தொளி பரவ
பாலகனே வருக!

A. டொமினிக் பிறேமானந்
கரவெட்டி

# பாலகனே அருள்வீரே!

மார்கழியின் குளிரினிலே
மாமரியின் மடியினிலே
மாசற்றுப் பிறந்தவரை
மனதாரத் துதிக்கின்றோம்

குடில் தனிலே எமக்காக
குழந்தையாய் பிறந்தவரே
குழந்தைகள் நாம் செய்யும்
குற்றமெல்லாம் பொறுத்திருவீர்

C. தஷாஜன்
யாழ். மத்திய கல்லூரி

# இன்னல்கள் யாவும் அழித்திட புத்தாண்டே வா!

மரண ஓலங்கள்
எங்கும் நீங்கட்டும்!
வன்முறைக் கலாச்சாரம்
எம்மைவிட்டு அகலட்டும்!
ஈகையிரக்கம் வாய்மை
எம்முடன் என்றும் இணையட்டும்
ஆன்மீகத் தேடல்
எம் மண்ணில் பெருகட்டும்
உயிர்பூட்டும் கருவிகளாய்
தினம் மனிதன் மாறட்டும்!
சிதைந்த உறவுகள்
ஒன்றாய் இணையட்டும்!
இத்தனையும் எம்மவருக்கு
தந்திடவே!
புத்தாண்டே – நீ
பிறந்து வா!

வி.பி.ரி
அரியாலை

# காவிய நாயகா உன் முகம் காட்டு

காலமது காத்திருக்க கண்மணியே பாலா
கன்னிமரி கரம்தனில் நீ தவழ்வதை கண்டிட
காரிருள் போக்கியே காவியம் படைத்திட
காவிய நாயகா உன்முகம் காட்டு

ஏங்கும் விழிகள் ஏக்கங்கள் தீர
ஏழையர் வாழ்வு ஏற்றம் காண
என்றும் காணா அமைதி நிலைக்க
எங்கும் யாவரும் மகிழ்ந்தே வாழ
காவிய நாயகா உன்முகம் காட்டு

பூமியிலுள்ளோர்க்கு பூரிப்பு உண்டாக
புதுமைகள் பெற்று புண்ணியம் நிறைந்திட
புதுப்பிறப்பாய் மாறி புது உலகம் படைக்க
புத்துயிர் பெற்ற புதுப் பொலிவு காண
காவிய நாயகா உன்முகம் காட்டு

பாலகன் பிறப்பின் அர்த்தம் கண்டு
பாங்காய் நாமும் தினமும் வாழ
பாவச் செயல்கள் பலவும் விட்டு
பட்டினி நீங்கி பசியற்று வாழ
பாசங்கள் நிலைத்து உறவுகள் தொடர
காவிய நாயகா உன்முகம் காட்டு

ஓடுகிறோம் ஓடுகிறோம் ஓரிடம் தரிக்காது
ஓரிடம் காட்டு ஒன்றாய் நாம் வாழ
ஓலங்கள் நீங்கி ஓரினமாய் வாழ
ஒளியாய் வந்து பிறந்தே
காவிய நாயகா உன்முகம் காட்டு

அ. ஜஸ்ரின்
புகுமுக மெய்யியல் அகம்
சில்லாலை

# விரைந்து வாரும் செம்மலே!

மானிடர் குலம் தேடி மண்ணிலவதரித்து – அன்று
மாந்தர் மீட்புப் பெற வந்த மீட்பனே!
இன்று நீர் எங்கு தான் பிறப்பீரோ!
மந்தைகள் இடம் தந்தனவே அன்றுஉமக்கு
மந்தைகள் உறங்கிடவும் இன்று இடமில்லையே!

எந்தையர் குற்றமெல்லாம் மறந்து
எமக்கோர் விடுதலை தந்திட
நீதியின் செங்கோலை நிலை நிறுத்தி
சமாதான சூரியன் உதித்திட
விரைந்து வாரும் செம்மலே!

ஆளும் அரசு இங்கொன்று வேண்டாம்
உம் அரசிங்கே மலரட்டும் எமக்கு
ஆட்சியின் பொறுப்பை தோள் மேல் தாங்கி
வியத்தகு பெயர்கொண்டு எம் நடுவே
அமைதியின் மன்னனாக வந்திடுக இம் மண்ணில்!

லூசிலா ஞானப்பிரகாசம்
நாரந்தனை

# இயேசு பாலனே நீ மீண்டும் பிறக்காயோ!

இயேசு பாலனே எம்மவர் துயர் தீர்க்க
கலங்கிடும் எம் விழி நீர் துடைக்க
உள்ளங்களில் உறைந்திடும் கறைகள் போக்க
எம் மண்ணின் அவலங்கள் மறைய
பாலனே நீ மீண்டும் பிறக்காயோ

உண்மைகள் ஒதுங்கி நிற்க
உடல்கள் உயிருடன் புதைக்கப்பட
பாவத்தின் காரிருள் பாரில் பனிபோல் படர்கையிலே
உண்மை ஒளியாய் உலகில் ஒளிர்ந்திட
பாலனே நீ மீண்டும் பிறக்காயோ

ம. நிலோஜனா
பருத்தித்துறை

# இயேசு உன்னில்

பணத்தைபோல் தேடினால் – ஞானத்தை
புதையலைப் போல் தோண்டினால்
புனித போதனையை விரும்பினால் – அன்பை
பிறர்க்கு வாரி வழங்கினால்
பிறப்பார் இயேசு உன்னில்

செயலை திறந்து காட்டினால் – ஞானத்தால்
சிந்தனைகள் சீர்செய்யப்பட்டால்,
தெய்வ பயம் கொண்டால் – அன்பால்
தொண்டாற்றும் ஞானியாக இருந்தால்
பிறப்பார் இயேசு உன்னில்

பண்பான நாவை காப்பாற்றினால் – ஞானத்தால்,
பகுத்தறிவிற்கும் ஆன்மாவை காவல் செய்தால்,
மனத்தூய்மையான மனிதனானால் – அன்பால்
மனிதம் உன்னில் மகிழ்ந்தால்,
பிறப்பார் இயேசு உன்னில்

சமாதான ஆலோசனைகள் செய்தால் – ஞானத்தால்
சாந்தமான மகிழ்ச்சி பின்தொடர்ந்தால்
பேச்சில் கவனமுள்ளவனாய் இருந்தால் – அன்பால்
பேறான நன்மைகள் வந்து சேர்ந்தால்
பிறப்பார் இயேசு உன்னில்

பெ.இ. அமலநாயகம்
நாவாந்துறை

# ஒளி பிறந்துள்ளது

வழிகாட்டி வாழ்வூட்டிட
வள்ளல் ஒளி பிறந்துள்ளது
விண்ணவரும் மண்ணவரும் வணங்கிட
வானகத் தரசர் மண்ணில் மீட்பராய்
அன்பின், நிமிர்த்தம் அவதரித்துள்ளார்
ஆனந்த ஜோதி மண்ணில் உதித்துள்ளது
இறைவா நீ பிறந்தே வரவேண்டும்
நிறைவாய் நின் அருள் தரவேண்டும்
மறை வழியில் ஒளிரும் மலரே
குறைவில்லா வாழ்வு தரும் சுடரே
மனங்களில் மலர்ந்திடுக எம் மன்னவனே
மாடடை குளிரில் தவழும் சின்னவனே
மாமரி மடியில் உதிக்கும் எம்மவனே
மாண்புடன் விடியல் தரும் இறைமகனே

ஜோ. ஜெஸ்ரின்
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலரும் புத்தாண்டு மகிழ்வாய் மலர...

மேரி மஞ்சுரிக்கா ஆனந்தராஜா
கரவெட்டி

போர்காலச் சூழல்கள், அரசியற் குழப்பங்கள் நிம்மதியற்ற மனித வாழ்க்கைகள், மீள முடியாத துன்ப துயர நிகழ்வுகள் மத்தியில் இந்த நூற்றாண்டின் முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகை எம் மத்தியில்.

ஆகில உலகமே மகிழ்ச்சியாக கொண்டாடும் தினம், இந்த கிறிஸ்மஸ் தினம். வருடா வருடம் கிறிஸ்மஸ் தினமும் வருகின்றது. ஒவ்வொருவரும் தத்தமது இயல்புக்கு ஏற்ற வகையில் அமைதியாகவோ, ஆடம்பரமாகவோ கொண்டாடுகிறார்கள். சமய வழிபாடுகளில் கலந்து செபிக்கின்றார்கள். உறவினர், நண்பர், அயலவர் என வாழ்த்துத் தெரிவிக்கின்றார்கள், வாழ்த்து மடல்கள் அனுப்புகின்றார்கள் பரிசில்கள் வழங்குகின்றார்கள் ஏழை, எளியவருக்கு உதவி செய்கின்றார்கள். இவை யாவும் வருடந்தோறும் எம் மத்தியில் நிகழ்கின்றன. எமது செயற்பாடுகளில் இவையும் பின்னிப் பிணைந்துள்ளன.

இருப்பினும், இவை யாவும் எமது உள்ளங்களின் உண்மையான மகிழ்ச்சியின் வெளிப்பாடா? அல்லது வெளிப் பகட்டுக்காகவா? சிந்திப்போம்!

இன்று எமது தேசத்துக்குத் தேவையான சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம் போன்றன மலர்ந்ததாகவோ அல்லது அதற்கான சாத்தியக் கூறுகளோ இன்னும் தான் தென்படவில்லை. மாறாக, நாளுக்கு நாள் போர் நடவடிக்கைகள், ஆக்கிரமிப்புகள், அழிவுகள் பெருகிக் கொண்டே போகின்றன.

இதற்கு உதாரணமாக இந்த ஆண்டில் அண்மையில் அகில உலகையும் ஆட்டிப் படைக்கும் சக்தி கொண்ட அமெரிக்க நாட்டிற்கு நடந்து என்ன? ஒரு சில கணப் பொழுதில் நிகழ்ந்தது என்ன? அதன் விளைவாக ஆப்கனிஸ்தான் போன்ற முஸ்லீம் நாடுகளில் நடப்பது என்ன? இற்றைக்கு 2001ம் ஆண்டுகளுக்கு முன் மனுக் குலத்திற்கு மீட்பைக் கொண்டுவந்த மனுமகன் பிறந்த இடமாகிய பெத்லகேமிலும், அதன் அண்டைய நாடுகளிலும் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. யுத்த நடவடிக்கைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து அல்லோகல்லோலப்படுகின்றனர் ஏன்? தேவலாயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவிக் கிறிஸ்தவர்கள் கொன்றழிக்கப்பட்டனர்.

எமது நாட்டில் கூட கடந்த வருடம் மக்களால் தெரியப்பட்ட அரசு ஒரு வருடத்தில் கலைக்கப்பட்டு மீண்டும் ஓர் தேர்தல்.

இப்படியான அரசியல் மாற்றங்கள் குழப்பங்கள் யுத்தங்கள் ஒரு புறமிருக்க மறு புறத்தில் முழு உலகையும் கலங்கடித்துக் கொண்டிருக்கும் அத்திரெக்ஸ் கிருமிகளும், அதன் தாக்கங்களும் இவ்வாறான வன்முறைக் கலாச் சாரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் இந்த பூமிக்கு எப்போது மீட்சி? அல்லது மீட்சியே இல்லையா?

ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்மஸ் புத்தாண்டு திருப்பலிகள் பெரும்பாலும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டாக மலரவே பாப்பரசர் முதல் பாமரர் வரையிலான வேண்டுதலாக இருக்கும் ஆனால்............?

இவையெல்லாவற்றுக்கும் காரணம் யார்? கடவுளையே தொடர்ந்து குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் நாம் தான் காரணம் ஆம். நாம் ஒவ்வொருவரும் மனம் மாறவேண்டும். எமது பாவநிலையில் இருந்து மீட்புப் பெறவேண்டும். இன மத பேத வேறுபாடின்றி எல்வோரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்பதை நன்குணர்ந்து ஒருவரை ஒருவர் எவ்வித நிபந்தனையுமின்றி அன்பு செய்ய வேண்டும். ஒருவரொருவருடன் பகைமையை நீக்கி பாசத்தை வளர்ப்போம்.

மலர்கின்ற புத்தாண்டு ஐக்கியம், ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம் நிறைந்த ஓர் மகிழ்வான ஆண்டாக மலர அனைவரும் ஒன்றுபடுவோம். அளவுக்கதிகமான ஆடம்பரம், ஆரவாரங்களைத் தவிர்த்து உண்மையான தூய்மையான அன்புடன் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவிப்போம், உதவி செய்வோம் கிறிஸ்து 2001ம் ஆண்டுக *ளுக்கு முன் கொண்டு வந்த சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம். இறைவனுக்கு நன்றி கூறுவோம். இறைஆசிர் பெறுவோம். மலரும் புத்தாண்டை மகிழ்வாய் வரவேற்போம்.*

# உங்களுக்கு அமைதி உரித்தாகுக!

S.G. றூபவசந்தினி
கொழும்பு — 13

''மனிதம் புனிதமாக
மண்ணுலகில் உருக்கொண்ட
அமைதியான பொழுதில்
அன்பும் அருளும் நீதியும்
புதுப் பிறப்படைந்ததே''

ஆம் பல்லாயிரமாண்டுகட்கு முன் வரலாறாகி நம் வாழ்வுடன் இணைந்து நடைபோடும் கிறிஸ்துவின் உதயத்தை அன்புடன் வரவேற்போம். மனிதம் விலைபோகும் எம் அவனியில் அளவில்லா அன்பாலும் இரக்கத்தாலும் மானுடத்தின் மாபாதகச் செயல்களை மன்னித்து புதுவாழ்வு வழங்க புண்ணியன் மீண்டும் எம்மிடையே பிறந்துள்ளார்.

**ஓரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளது**
**ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்**

ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர்; வலிமைமிகு இறைவன் என்றுமுள தந்தை அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும் (எசாயா9:6)

எளிய உள்ளமும் தூய அன்பும் உண்மையான தியாகமும் நிறைந்த தாழ்மையுள்ளம் கொண்டவராக மனுமகன் யேசு எம்மைத் தேடி வந்துள்ளார். நம் வாழ்வில் புதிய வசந்தத்தையும் விடியலையும் பாதுகாப்பையும் அளித்து என்றும் அரவணைத்து காத்திடுவார்.

நீதியின் தேவன் பிறந்த நாள் நம்பிக்கையோடு வாழும் ஏழைகட்கும் ஒதுக்கப்பட்டோருக்கும் அடிமைகளுக்கும் மகிழ்ச்சியான புனித நாள். ஆணவமும் அகங்காரமும் சுயநலமும் நிறைந்தோருக்கு சவாலான நாள். ''நான்'' என்னும் எண்ணம் அகற்றி 'நாம்' என்னும் சிந்தையில் நாளும் வாழ்ந்தால் உலகில் என்றும் பேதமில்லை.

**''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக''** (லூாக் 2:14) என மகிழ்ச்சிப் பண் இசைக்கும் விண்ணக தூதர் பேரணியுடன் நமது குரல்களையும் இணைத்திடுவோம். அமைதியையும் அன்பையும் நாடும் நம் சமூகத்திற்கு இறைமகன் யேசு தரும் அமைதியை ஒருவர் ஒருவரது சுமைகளில் தோள் கொடுத்து உதவிக்கரம் கொடுப்பதன் மூலம் நிலைநாட்டிடுவோம். எம் கிறிஸ்தவ வாழ்வின் உயரிய விழுமியங்களான அன்பு விசுவாசம் நம்பிக்கை நிறைந்தோராக நாம் வாழ்ந்து கிறிஸ்துவின் பிரசன்னத்தை எம் வாழ்விலும் அயலவர் வாழ்விலும் என்றும் ஏற்றிடும் அமைதியின் தூதர்களாகிடுவோம்.

**''அன்பும் அமைதியும்**
**கண்ணின் மணிகளென**
**திகழ்ந்தால் நாளும்**
**வாழ்வில் பேரின்பமே''**

# வாரும்! ஆண்டவராகிய யேசுவே! வாரும்!!

மோ. தார்சீசியஸ்

யேசுவின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கும் எங்களைப் போன்று, அன்று மனுக்குலம் அவர் வருகையை ஆவலோடு காத்திருந்தது. அவரைப் பார்க்க நோக்க இருந்தார்கள்.

என்று பிறப்பார் எங்கள் அரசன் என்று எமக்கு மீட்புத் தருவார், எமது துன்பங்களுக்கு முடிவு எப்போது? விடிவு எப்போது? என்று காலமெல்லாம் காத்திருந்தார்கள். அரசர்க்கெல்லாம் அரசன். மன்னாதி மன்னன், மனுக்குல மகிபன் என்று வருவார்? எப்போது வருவார்? என்று ஆசைமேல் ஆசையாக காவல் இருந்தார்கள்.

இன்று நாமும் கிறிஸ்து பிறப்புக்காகக் காத்திருக்கின்றோம். ஆயத்தங்கள் செய்கின்றோம். ஆனால், பலரது ஆயத்தங்கள் ஞான, ஆன்மீக ஆயத்தமாக இராது மாறாக எப்படி மகிழ்ச்சியோடு ஆடம்பரத்தோடு, ஆடை அலங்காரங்களோடு வீட்டு அலங்காரங்களை நெறிப்படுத்துவதோடுதான் இருக்கின்றதேயன்றி, ஆன்மீக ஆயத்தமாக அதனை அமைப்பதற்கு முயலுவதில்லை.

இறைமகன் கிறிஸ்து அன்று எமக்காகப் பிறந்தார். எப்படிப் பிறந்தார்? அரசர்களுக்குரிய ஆடம்பர அரண்மனையிலோ, மாடி மனையிலோ அல்ல, மாறாக மாடடை குடிலில் பிறந்தார். ஆம் குவலயம் காக்க வந்த குமரன் பிறக்க இடமின்றி எல்லோரும் இடமில்லை, இடமில்லை என்று விரட்ட, மிரட்ட கடைசியில் வாய்பேசா மிருகங்கள் மத்தியில் பிறந்தார். வாய்பேசும் மனிதரெல்லாம் நாய் போலத் துரத்தினார்கள். மனங் கலங்கவில்லை. எந்த மனித இரட்சணியத்திற்காக, விண்ணகம் விட்டு மண்ணகம் வரத் திட்டமிட்டாரோ, அந்த மண்ணக மனிதரெல்லாம் அவர் பிறப்புக்கு சிறப்புக்கு இடமளிக்க மறுத்துவிட்டார்கள்.

மந்தைக் குடிலினிலே கந்தைக் கோலனாக தந்தை சித்தம் ஏற்று, சிந்தைகளைக் கவர விந்தை புரிவோனாக, மக்கள் நிந்தைகளைச் சிரமேற்கொண்டு பாரினிலே பாலகனாய் அவதரித்தார். வாழ்வளிக்க வந்த வல்லவரை வாழு முன் வரலாறு வகுத்த நல்லவரை, வார்த்தை மனுவுருவான தூயவரை மக்கள் அன்று மதிக்கவில்லை. அவரை வரவேற்கவில்லை. காரணம் அவரை உணர அறிய அவர்களால் முடியவில்லை.

மக்கள் பிணியைப் போக்க விடுதலை அளிக்க வந்தவரை மாக்கள் வரவேற்றார்கள். மந்தை மேய்ப்போா ஆராதித்தார்கள். வானவர்கள் வாழ்த்தினார்கள். அன்று அந்த நல்ல தேவன் வல்ல இறைமகன் என்ன கொண்டு வந்தார்?

அவர் வாடையின் கொடுமையிலே ஆடையின்றி பாதி இரவினிலே, ஆதி பிதாவின் அன்பான புத்திரனாக மார்கழி மதியில் மாமரி மைந்தனாக வந்துதித்த தேவன் சுமந்து வந்தது வேறொன்றுமல்ல, சமாதானம், தன்னை வரவேற்காத ஊதாசீனம் செய்த, உதறித் தள்ளிய மக்களுக்கு அவர் மகிழ்வோடு கொண்டுவந்தது சமாதானம், நிரந்தர சமாதானம்.

இன்று எங்களுக்கும் அதே சமாதானம் தான் நிரந்தர சமாதானம் தான் நிம்மதியான சமாதானம்தான் தேவை. வாரும்! ஆண்டவராகிய யேசுவே வாரும் என்று வருந்தி அழைக்கும் அவரிடம் திருந்தி வாழும் உள்ளத்தையும், புரிந்து வாழும் தன்மை யையும் இருகரம் நீட்டி வேண்டுவோம். எம் மகள் இன்று வேண்டும் சமாதானத்தை தரவல்லவர் அவரேயன்றி வேறெவராலும் அல்ல. இன்று நமக்கும், நமது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் குறைவற்ற நிறைவான சமாதானம்தான் வேண்டும் உயிர் இழப்புக்கள் உடமை இழப்புக்கள் உறவு இழப்புக்கள் மத்தியிலே வாடும் மக்கள் தேடும் சமாதானம், கூடும் என்ற நம்பிக்கைக்கு வரவிருக்கும் தேவன் வல்ல தேவன் வாழ்வளிக்க.

*''உன்னைப்போல் உன் அயலானையும் நேசி''* என்ற தேவனின் வாக்கினை நாம் நினைந்து இந்த இனிய நாட்களின் மகிழ்வினைக் கொண்டாட முடியாது வேதனைப்படும் எம் உடன் சகோதரர்களையும், இடம்பெயர்ந்து சோதனைக்குட்பட்டு வாழும் எம் மக்களையும் நினைந்து அவர்களுடன் பகிர்ந்து வாழ, எமது பாசத்தை, நேசத்தை ஆதரவை அளிக்க முயலுவோம். இதனால் இறைமகன் கொண்டு வரும் சமாதானம் அனைவர் மேலும் தங்கும்.

## இன்று யேசு பிறந்திட

இருளும் போரும் புடை சூழ
இகமதை இருள் ஆட்சி செய்திட
இறையவனாம் யேசு ~ எம்
இதயத்தில் வருகின்றார் பாரும்
அன்று யேசு பிறந்திட
உள்ளமும் இல்லமும் இல்லையடா
இன்று யேசுவை வருந்தி வரவழைக்க
இல்லமதில் அழகான குடிலடா
ஏன் என்று எனக்கும் புரியவில்லை
அத்தனையும் வேசங்கள்
வேசங்கள் மறைந்திட்டால்
விடிவு தான் ஒளியாகும்

**ஜெ. மரியனி கஜானி**
**யா.திருக்குடும்ப கன்னியர்மடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் பரிசு

சகோ.ம.லியோனிஸ் செ.தா,
செபமாலை ஆச்சிரமம்,
வவுனியா



''டிங்... டிங்... டிங்.....'' தாபல்காரனின் மணிச்சத்தம் கேட்டு ஏதோ வேலையில் இருந்த நேசமலர் வாசலுக்கு ஓடிவந்தாள். மிகுந்த ஆவலோடு ஓடிவந்தவள் மிகுந்த ஏமாற்றத்தோடு கண்கசிந்து கண்ணீர் வடிய கருவிழி சிவந்து .மெய்தளர்ந்து உள்ளே வந்தாள் ''என்..ன.டி புள்..ள தம்..பிய... கட..தா...சி ஏ..தும் வந்...துதா?'' என்றாள் நேசமுத்தாச்சி கரகரத்த குரலில். இவள் எப்படிப் பேசுவாள்? வேதனைக் கடலில் அவளே மூழ்கிக் கொண்டிருக்கிறாள். அவள் பதில் ஏதும் சொல்லவில்லை, ஆனால் எரிமலை வெடித்தாற்போல் கதறி அழுதாள், அவளால் இன்னும் அழுகையை அடக்கி வைக்க முடியவில்லை. விடுவாளா ஆச்சி, அவள் என்ன நினைத்தாளோ தெரியாது தன் பங்கிற்கு ஒப்பாரி வைத்து அழத் தொடங்கினாள்.

''ஐயோ– என்னாச்சோ'' ஏதாச்சோ.... என்ர ராசாவிற்கு? வரிக்கு வரி..... ஆச்சி ஆச்சி எப்படி இருக்கா? என்று எழுதுவியே என்ர ராசா... உனக்கு என்னாச்சு? நாங்க எங்க போய்த் தேட?.........

''இப்ப ஏனனை ஒப்பாரி வச்சழுகிற? அக்கம் பக்கத்தில் இருக்கிறவங்க ஏதாச்சும் நினைச்சிக்கப் போறாங்க'' அப்படி ஒன்றை என்னால நினைச்சுக்கூட பார்க்கமுடியாது. அப்படியென்றால் நானும் செத்துப் போயிடுவன்'' என்று ஆச்சியை அடக்கியவள் விம்மி விம்மி அழுதுகொண்டே திண்ணையில் சாய்ந்து கொண்டாள். சாய்ந்தவள் அப்படியே அயர்ந்து போனாள். பாவம் எத்தனை இரவுகள் ஊனின்றி உறக்கமின்றி கண்ணீர் சிந்தினாள். அழுதழுது ஓடாய்த் தேய்ந்து போன இவளுக்குள்ளும் எத்தனை சோகங்கள் பாவம் எப்படித்தான் தாங்கிக்கொள்வாள்?

நேசமலர் ஒரு நல்ல குடும்பத் தாய் இவளுடைய வாழ்வில் வசந்த காலம் என்பது மிகக் குறுகிய ஒரு காலம். மிகவும் சந்தோஷமாக இருந்த இவளுடைய திருமண வாழ்க்கை தீடீரென வீசிய புயலில் கொப்பிழந்த பெருவிருட்சம் போல், வாகன விபத்தொன்றில் தன் கணவனை இழந்தாள். அப்போது அமலனுக்கு வயது இரண்டு அப்பவே தானும் தற்கொலை செய்து கொள்ளவே விரும்பினாள். ஆனாலும் அமலனை அனாதையாக்கிவிட்டு செல்ல அவள் விரும்பவில்லை. இந்த பூமியிலே அவளுக்கு சொந்தம் என்று சொல்லிக்கொள்ள அவளது வயதான தாயும், அமலனுமே இருக்கிறார்கள். ஏதோ தன்னால் முடிந்தளவிற்கு ஒரு சிறிய அப்பக்கடை நடத்தி ஏதோ தங்களுடைய வாழ்க்கையை எத்தனையோ கஷ்ரங்கள் இடையூறுகள் அவமானங்களுக்கு மத்தியில் நடத்தி வந்தாள். இப்போது ஏறக்குறைய எட்டு மாதங்களாகத்தான் கொஞ்சம் நிம்மதியாக அமைதியாக இருந்தாள். அதுவும் அமலன் வளர்ந்து குடும்பப் பொறுப்பை ஏற்று தொழில் செய்யத் தொடங்கிய பிறகுதான்.

ஆனால் மீண்டும் அவளுடைய வாழ்வில் புயல் வீச ஆரம்பிச்சிற்று. இப்போது 2 மாதங்களாக அமலனிடம் இருந்து எந்தப் பதிலும், தொடர்பும் இல்லை என்னாச்சோ, ஏதாச்சோ என்று எதுவும் தெரியாது. அதுபோக இந்தா அந்தா என்று சாவை எதிர்நோக்கி இருக்கின்ற வயோதிபத்தால் படுத்த படுக்கையில் அவளுக்கு ஆக வேண்டிய அனைத்தையும் ஒத்தையாக நின்று அவளே தான் கவனிக்க வேண்டும். எத்தனை சுமைகள் தான் இளம் விதவைக்கு? இருந்தும் அவள் இறைவனை நம்பினாள். எனக்கேன் இத்தனை துன்பங்களைத் தருகிறாய் இறைவா? என்று அவள் இறைவனை நொந்து கொள்ளவில்லை. பாவம் கொஞ்சம் அயர்ந்து தான் தூங்கட்டுமன்.

''நேசம்..... நேசம் '' என்று யாரோ கூப்பிடுகின்ற சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தவள் முன்னால் மோசஸ் அண்ணன் நிற்பதைக் கண்டு வாங்கண்ணன் எப்ப வந்தீங்க? நான் கொஞ்சம் அயர்ந்து போயிற்றன் என்றவள் ஒரு கதிரையை எடுத்துப் போட்டாள். ''என்னவோ அம்மா கொஞ்சமாவது தூங்கிகினியே கடவுளிற்கு நன்றி'' என்றபடி ஒரு பெருமூச்சுவிட்டு உட்கார்ந்தார் ''யார் இது மோசஸ் தம்பியா? என்றாள் ஆச்சி. ''ம்... நான் தானனை எப்படி சுகமெல்லாம்?'' ''ஆத்தே... எனக்கென்ன இண்டைக்கோ நாளைக்கோ.... போய்ச் சேர்ந்திடுவன் இவள் தான் .... இருந்த ஒத்தப் புள்ளைக்கும் என்ன நடந்தது என்று தெரியாமல் பாவம்....'' என்றவள் பொருமிப் பொருமி அழத் தொடங்கினாள் '' சரி சரி அதொன்றுமில்லாச்சி'' என்றவன் நேசத்தைப் பார்த்தான். சோகவரிகள் இழையோட இரத்தமென இருவிழிகள் சிவக்க முகம் வாடி இருந்த நேசத்தைப் பார்த்து ''புள்ள நான் சொல்றதக் கேள் பிரச்சினை ஒன்றுமில்லை, நான் இப்ப கொழும்பிற்கு போய்த்தான் வாறன் அமலனைப் பற்றி விசாரிச்சனான்'' என்று சொல்லி முடிக்க முன்னுக்கு ''என்ன! என்னாச்சு என்ர புள்ளைக்கு'' என்று பதறினாள் நேசம். ''ஒன்றுமில்லப் புள்ள நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாய்க் கேள், அவனை அண்டைக்கு பொலிசு புடிச்சுக் கொண்டு போனாங்களாம். ஏதோ சந்தேகத்தில அவனென்ன புலியே? கொஞ்சநாள் வச்சிருந்து போட்டு விட்டிடுவாங்க பயப்பட வேணாம்'' என்று சொல்லி முடித்தான். அவ்வளவு நேரமும் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்த நேசம் இன்னும் அடக்கிவைக்க முடியாமல் ஓவென்று கத்தி அழுதாள் ''ஐயோ என்ர புள்ளைக்கு எப்படி சாப்பாடு கொடுத்தாங்களோ? எப்படி எல்லாம் அடிச்சாங்களோ? ஐயோ என்ர புள்ளையை'' அவர் குறுக்கிட்டு ''என்ன நேசம் இப்ப என்ன அவனுக்கு ஒன்றும் ஆகாது நீ ஏன் அதையிதையெல்லாம் நினைக்கிறாய்? இந்த கடவுளிட்ட பழியைப் போட்டிட்டிரு எல்லாம் சரிவரும் நாங்கள் எல்லாம் இருக்கிறம் தானே? நாங்கள் அதைப் பற்றிப் பார்ப்பம்'' என்று ஆறுதல் கூறியவர். ''அப்ப நேசம் நான் போயிற்றுவாறன் என்ன? யோசியாதே'' எழுந்து நடந்தார். அவர் போவதையே கண்ணீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் நேசம்.

அப்படியே நாட்கள் பல ஓடி நத்தார் பண்டிகையும் நெருங்கி வந்தது. பட்டாசு மத்தாப்புக்களோடு இப்பவே கிராமம் முழுவதும் ஒரு களைகட்டியிருந்தது. ஆறு வருடங்களுக்குப்பின் இப்போது தான் பாதுகாப்புப் படையினர் பட்டாசு கொழுத்த அனுமதி கொடுத்திருந்தனர். அப்படியென்றால் கேட்கவா வேண்டும் மக்களின் ஆரவாரத்தை ஒருவாறு நத்தார் பூசைக்கும் போயிற்று வந்தாச்சு ஆண்டவரே உன்னுடைய வருகையால் இந்த உலகமே சந்தோஷமாக இருக்கு. இன்றைக்கு நான் மாத்திரம் சந்தோசமாக இல்லையே ஆண்டவரே? இது என்னுடைய குறுகிய மனப்பான்மைதான். ஆனாலும் ஆண்டவரே உம்மிடம் நான் என்னத்தை கேட்கப் போகிறேன் என்னுடைய புள்ளையை திரும்பக்கொடு, என்னுடைய புள்ளையை உன்னுடைய பிறப்பின் பரிசாகக் கொடு. இதுதான் அன்று முழுக்க அவளுடைய மன்றாட்டாக இருந்தது. அம்மா! இன்றைக்கு நம்முடைய மீட்பர் பிறந்திருக்கிறார் ஏழைகள் எங்களுடைய வாழ்வில் இனி புது வசந்தம் வீசும். அம்மா இனிமே நீங்க அப்பம் சுட்டுவிற்கக் கூடாது. எனக்கு வேலை கிடைத்திருக்கிறதுதானே நான் இனி காசு அனுப்புவன் நீங்க இனி கஷ்டப்பட வேண்டாம் நீங்கபட்ட கஷ்டம் எல்லாம் போதும் இது போன வருடம் நத்தாருக்கு அமலன் சொன்ன வார்த்தைகள். இதை நினைத்துக் கொண்டிருந்தவள் கண்களில் இருந்து கண்ணீர் சாரசரையாக வழிந்தோடியது.

''அம்மா, அம்மா... என்று யாரோ கூப்பிடுகின்ற சத்தம் கேட்டு தன் காதுகளையே நம்பமுடியாமல் திருப்பிப் பார்த்தாள் நேசம். அவளுடைய கண்களைக்கூட அவளால் நம்ப முடியவில்லை. அங்கே அமலன் நின்று கொண்டிருந்தான் உள்ளத்தில் இருந்த அத்தனை வேதனைகள் குமுறல்கள் அனைத்தும் உடனேயே அடங்கி அங்கே பொங்கியெழுந்த இன்ப வெள்ளத்தை தாங்கமுடியாமல் அவள் இதயமே வெடித்து விடும்போல் இருந்தது.

# குடிலில் ஒரு குழந்தை

அ. மரியதாஸ்

உலகின் பல பாகங்களிலும் ஒரே கொண்டாட்டம் குதுாகலத்தோடு கூடிய ஆனந்தம். காரணம் மார்கழி மாதத்தின் இருபத்தி நான்காம் நாள் நடுநிசிவேளை யேசு மனிதனாகப் பூவுலகில் அவதரித்த நாள். மனித ஆன்மீகத்துக்கு ஒளிகொடுக்க அவர் உதித்த நாள். அதனால் ஒளிவிழா என்றும், கிறிஸ்மஸ் என்றும் மக்கள் கொண்டாடும் ஒரு பொன்நாள்.

பலவித வெளிச்சக் கூடுகள் கட்டி அதற்கு ஒளி ஏற்றியும், வீடுகள் தோறும் மாட்டுக்குடில் அமைத்து அதில் ''பாலன்'' பிறப்பென உருவங்கள் வைத்து அலங்கரித்தும், வார்ணத் தாழ்களாலும், பலூன் என பலவற்றால் அலங்காரமேற்றிய ''கிறிஸ்மஸ்'' மரம் வைத்தும், கிறிஸ்மஸ் தாத்தா சகிதம் எங்கும் ''கரோல்'' கீதங்கள் பாடியும், ஒளி விழா என்று எங்கும் கொண்டாடியும், புத்தாடை அணிந்து பொலிவாக ஆலயத்துக்குச் சென்றும் மக்கள் கிறிஸ்து பிறப்பை ஆனந்தமாய் கழிக்கும் நாள். ஆனால்! வெளி ஆடம்பரங்களில் மிதப்பவர் பலருக்கு கிறிஸ்துவின் பிறப்பின் உண்மைப் பொருள், அதில் அடங்கியிருக்கும் தத்துவங்கள் புரிந்து தான் கொண்டாடுகிறார்களா என்றால்!

மார்கழி மாதக் கடுங்குளிர் காலம். நடுநிசிவேளை. மரியாளுக்கு மகப்பேற்று நேரம் நெருங்கியது. மாளிகைகள், வீடுகள் சத்திரங்கள் எனப் பல இருந்தும், இடம் கிடைக்காமல் போகவே ஆடு மாடுகள் உறையும் குடிலில் எம் மீட்பராம் யேசுவை மரியாள் பிரசவித்து, துணிகளால் சுற்றி வைக்கோல் தொட்டிலில் கிடத்தினாள். பாவத்தைக் கட்டி அழியும், அழிக்கும் மனிதனை மீட்க, இப் பச்சைக் குழந்தைக்கு இக்கதியை இறைவன் ஏன் கொடுத்தார் என்றால் ஏழ்மையையும், தாழ்ச்சியையும் உணர்த்தவே.

''எவன் தன்னைத் தாழ்த்துகிறானோ அவன் உயர்தப்படுவான்'' என்னும் தத்துவமும் உணர்த்தப்படுகிறது.

யேசு பிறந்த வேளை மந்தை மேய்ப்போரின் மத்தியிலே ஒரே ஒளி மயமாய் இருந்தது. அவர்கள் அஞ்சினர். வானதுாதர் தோன்றி ''அஞ்சாதீர் இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்'' என மங்கள வார்த்தை கூறி ''உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக. உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக'' எனப் பாடினார்கள். இறைசெய்தியை நம்பிய இடையர்கள், பெத்தலேகம் சென்று மீட்பரை வணங்கித் துதித்தனர். அவரின் பிறப்பை எங்கும் அறிவித்து மகிழ்ந்தனர். மீட்பரை முதன் முதலில் தரிசிக்கும் பாக்கியமும் பெற்றனர்.

இறையருளால் யேசு வளர்ந்தார். தன் இரட்சிப்பு பணியைச் செய்யத் தொடங்கினார். அன்பே மையப் பொருள் என்றார். ''உன்னைப் போல் உன் பிறரைநேசி'' என்றார். உபதேசம் பல செய்து, புதுமைகள் பல செய்து, பாவிகளைத் தேடி பாவங்களை மன்னித்து, பாவக்கறை படிந்த இதயங்களைத் தேற்றினார்.

குடிலில் பிறந்த யேசு கல்வாரிக் குன்றில் தன் உயிரையும், இரத்தத்தையும் தியாகம் செய்ததெல்லாம் ஒரு புனிதமான வரலாறு. ஒரு பெரும் ஆன்மீகத் துாய்மையானபாதை. பாவத்தை வெறுத்து, இறைவனோடு எம்மை ஒன்றிணைக்க வைக்கும் புனிதப் பயணம்.

இவைகள் யாவையும் மறந்து, பாவ இருளில் தேங்கி மனசாட்சியையும் மானத்தையும் விற்று, போலிச் சம்பிரதாயங்களுக்கு அடிபணிந்து, இறைமையை யாசிக்காமல் இறை கட்டளைகளை ஏற்று வாழாமல் இருளில் கிடக்கும் உள்ளத்தோடு, ஒளி விழா, கிறிஸ்மஸ் கொண்டாட்டம் என மகிழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

# வருமோ இனி?

மண்ணாலே படைத்த மனிதனில்; பாவம்
பெண்ணாலே தோன்றிட; தேவன் – தன்மகன்
வருவார் தயவாய்த் தரணிக்கு மீட்பு
தருவார் என்றவர் வாக்கு

தூதன் கபிரியேல் வாழ்த்திய வான்மொழி
மாதா கேட்டனள் கனிந்து – நாதன்
சித்தம் அதுவேதன் பரவசம் எனவே
இத்தரை புலர்ந்தது பகல்

இறைவனின் வார்த்தை மனுவாகிப் பாவ(க்)
கறையின்றிக் காத்திட வந்தது – நிறைவாய்
அருள்மரி உதரத்தில் அவதரித்த மகனால்
இருள் களைந்ததே பார்

மார்கழி மாதம் மழைக்குளிர் காலம்
பார்தனில் உதித்தார் பரமன் – பேர்தனில்
யேசெனும், அன்பினை அறிவித்த வேந்தனை
நேசித்து நெஞ்சம் நிறை

விண்ணவர் சாந்தியின் கீதம் இசைத்திட
விண்மீன் எழுந்தது வானில் – மண்ணிலே
கீழ்த்திசை ஞானியர் பாலனைப் பணிந்துமே
வாழ்த்திசை பாடினர் காண்

ஆட்டிடை மைந்தரும் பிறப்பின் சேதியைக்
கேட்டே கூடினர் நிசியில் – வாட்டிடும்
ஏழ்மை நிலையே இறைஏற்கும் தகையென
தாழ்வாய்ப் பணிந்திடு தாள்

போரும் பெரும் அழிவும், அவலமும்
சேரும் செந்நீரும், சிவந்து – ஊறும்
கண்ணீரும் கதறலும் யேசும் வரவால்
மண்ணொடு மண்ணாகும் மடிந்து

நேற்றைய நிலையும் அகதிகள் வாழ்வுமொரு
காற்றொடு கரைந்திட்ட கனவாய் – தேற்றிடும்
வல்ல தேவனின் வருகை ஒளிபிறக்க
அல்லல்கள் வருமோ இனி?

திருமதி றொசற் தவநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செங்கோலை உன் கையில் ஏந்து சிங்காரப் பாலனே உலகத்தைத் தாங்கு

செங்கோலை உன் கையில் ஏந்து!
சிங்காரப் பாலனே! உலகத்தைத் தாங்கு!
சிங்காசனம் மீது ஏறி –நீதி
மங்காது ஆட்சி செய் நீதானே மன்னன்

வேட்டுகள் போட்டிகள் சூழ – தேர்தல்
காட்சிகள் கண்டு நாம் அதிர்ந்து தான் போனோம்
கூட்டுகள் அணி சேர்ந்துமென்ன? – விலங்கு
மாட்டியே உள்ளது உடைத்திட நீ வா!

வெற்றிகள் பெற்றவர் எல்லாம் – இங்கு
புத்திகள் உள்ளவர் இல்லை
புத்திகள் உள்ளவர் எல்லாம் – இங்கு
வெற்றிகள் பெற்றதுமில்லை.

பற்றிய இனவாதத்தோடு – இங்கு
சுற்றிய சாதிமத பேதத்தால் கேடு!
முற்றிய புற்று நோய் இதனைக் – குணப்படுத்த
முதல்வனே! உன்னால் மட்டும் தான் முடியும்

உலகெங்கும் பயங்கரவாதம் – அதைவிடக்
கொடியது தான் பிடிவாதம்
கலகங்கள் தொடருது இதனால் – வந்து
காப்பாற்று! ஆட்சியைக் கைப்பற்று வா! வா!

நவாலியூர் நாயகி

# மனிதநேய மாண்பை மகிமையில் உயர்த்தும்

மனித நேய மாண்பை மகிமையில் உயர்த்தும்
புனிதபூமிப் பூங்கதிரே! பூசித்தோம் உம்மை

பணிவாழ்வு ஊழியங்கள் அணிகலனாய்ப் பூண்டு
மணிவாக்கு மன்னவரை வரவேற்போம் வாரீர்

அறியாமைப் போலிகளில் அலைகின்ற மந்தைகளைக்
குறிகாட்டி அழைக்கும் குழந்தையேசு! வருவீர்

ஏழைகட்கு முன்னுரிமை ஏந்திவரும் ஏந்தலனே
தோழமைக் கரத்தால் தொடுவீர் எம்மை

பரிசுத்த வழிபாடும் பரித்தியாகப் பேரணியும்
இரக்கின்ற கோரிக்கை உம்பாதம் காணிக்கை

பாசங்கள் பறிகொடுத்துப் பாரெங்கும் ஊனமுற்று
ஊசலாடும் உயிர்களோடு பேசவாரும் பாலகனே!

உருவழியும் ஊருலகில் ஓடுகின்ற அகதிகளை
குருவேயும்! குளிர்நிழலில் குடியிருத்தும் சுவாமி!

சங்கையுள்ள சமாதானம் சாந்திவழி சங்கமிக்க
மங்களமாய் வந்திருப்பீர் மனுமகனே! எங்களுடன்

ஞா. அரியமலர்
மிருசுவில்

# இயேசு பாலன் பதம் பணிவோம்!

மாட்டுத் தொழுவந் தனில்
மாபரன் பிறந்து விட்டார்
பாட்டுக்கள் பாடி நாமும்
பரன் மகனை புகழ்ந்திடுவோம்!

உலக மதன் மீட்பு தனை
உவந்தளிக்க வந்த அருள்
நிலமதிலே நிலவை மிஞ்சும்
நிறை ஒளியாய் தோன்றிவிட்டார்!

ஒற்றை துணியது உடுத்தி
ஓரமாகப் படுத் துறங்கும்
தற்பரனின் அக வழகை
தரணியிலே பாடிடுவோம்!

வேரோடி நிலைத்து நிற்கும்
வேற்றுமைகள் நீக்கிடுவார்
போரோடி நிலை குலைந்த
பொதுவாழ்வை சீர் செய்வார்!

ஓர் குலமாய் நாம் வாழ
ஒற்றுமையைப் பரிசளிப்பார்
தேர்மீது நீதி கொண்டு
தெய்வமவர் வந்திடுவார்!

மார்கழியின் குளிர் நடுவே
மனுமகனாய் வந்துதித்தார்
பார் பஞ்ச பாவம் போக்க
பாதையது காட்டுகின்றார்!

இறை உடலை மனிதருடன்
இணைத்திடவே பிறந்துவிட்டார்
கறை படிந்த மனுக்குலத்தில்
கணையருளை பொழிய வந்தார்!

சாதி மத சக்கரத்தால்
சாய்ந்தழிந்து போகுமிந்த
நீதியற்ற வாழ்க்கையதை
நிறைவூட்ட வந்துவிட்டார்!

வார்த்தை ஆகி வசந்தமாகி
வாழ்வதனின் பொருளுமான
ஓர் பொருளாம் இறைபதத்தை
ஒளிமயமாய் கொண்டு வந்தார்!

நாடு சாந்தி பெற்றிடவும்
நாங்கள் மகிழ் வடைந்திடவும்
நாடிடுவோம் அவர் அருளை
நாமுமின்று ஒன்றிணைந்து!

எங்கள் வாழ்வு இயல்புபெற
எழில் நிலமாய் விழைவு பொங்க
மங்களங்கள் கூறியின்று
மனுமகனை வேண்டிடுவோம்!

யுத்தமதன் சத்தம் நின்று
யுகங்களெல்லாம் அமைதிவர
இத்தரையில் அவதரித்த
இயேசு பாலன் பதம்பணிவோம்!

ஆ. ஜென்சன் றொனால்ட், ஈச்சமோட்டை

# போரது ஓய்ந்திட ஓர் வரம் தா!

நித்திய தேவனின் நெறிமுறை தவறினர்
புத்திய பூவில் புன்மைகள் புரிந்தனர்
நாத்திகம் பேசியே மேலவன் மகிமையை மறந்தனர்
சத்தியம் காக்கவே இறையோனின் மகனாரும் - புகழ்
மெத்திய மரிமாதா தாலாட்டும் பாலகனாய்
சுத்திய துணி மீது சுந்தர ரூபமாய்
பெத்லேகேம் நகரின் பேரொளி தீபமாய் - இருள்
அடிமை விலங்கொடிக்க வந்தனன்

விழிகொண்ட நீரது விலகிட விரைந்து வா
மொழிகொண்ட சிறுமையை சீர்செய்ய பிறந்து வா
பழிகொண்ட போரது ஓய்ந்திட ஒரு வரம் தா
களிகொண்ட வாழ்வதை வழங்கிட வள்ளலே வா
துளிர்கொண்டு சமாதானம் துலங்கிட துணை நீ தா
குளிர்கொண்ட குடிலிடை குழந்தையாய் தவழ்ந்தவனே
ஒளிகொண்ட நின்வதன அருளெம்மேல் பொழிந்திடுவாய்

எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை

# பாதுகாவலன் ஆசிரியரின் கிறிஸ்மஸ் வாழ்த்து

பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களே!

கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்வடைகிறோம். கடந்த ஆண்டு பாதுகாவலன் விருது பெற்று மகிழ்ந்தபோதும் பாதுகாவலனின் 125ஆவது ஆண்டு நிறைவின்போதும் எம்மோடு மகிழ்வினைப் பகிர்ந்துகொண்டவர்கள் பல்வேறுவிதமான வேலைப் பணிகளில் எம்மோடு இணைந்துகொண்டவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைக்கிறோம்.

இனிவரும் காலங்களிலும் பாதுகாவலன் தன் பணியினை சிறப்பாக செய்ய உங்கள் ஒவ்வொருவரையும் சிறப்பாக எதிர்பார்க்கிறோம். குறிப்பாக பங்குத்தந்தையர்கள் வருகின்ற ஆண்டு இவ் விடயத்தில் அதிக ஆர்வம் காட்ட வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம்.

தமிழ் மக்களின் துன்ப, துயர வேதனைகள் நீங்கி நீதியோடு கூடிய நிரந்தர தீர்வினை புதிய ஆண்டில் நாம் பெற்றுக்கொள்ள பாலக இயேசு அருள்பாலிக்க வேண்டி நிற்கிறோம்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் மகிழ்வு செய்தி எம் உள்ளத்திலும் இல்லத்திலும் என்றும் நிலைக்க வாழ்த்துகிறோம்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
பாதுகாவலன்-ஆசிரியர்

இறைவன் நம்மோடு இம்மானுவேல் என்றென்றும் நம்மோடு வாழ்கின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360 பிரதான வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2001ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. P.197. T.P. No. 2378